
# சாயி மார்க்கம்

ஜனவரி - ஏப்ரல் 2020



இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின்

தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பர்த்தி யாத்திரைக்கான சாதனை - வடபிராந்தியம்



கைதடி முதியோர் இல்ல பணியாட்களுக்கு
ச.சா.ம.மே.கல்வி கருத்தரங்கு



பாலர் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டப்படல்
கிழக்கு மாகாணத்தில்




பாலர் பாடசாலை திறப்பு விழா - கஞ்சிரான் மோட்டை
நெடுங்கேணி - வடமத்திய மாகாணத்தில்



கால் நடை மருத்துவ முகாம் - கிழக்கு மாகாணம்



ஸ்ரீனிவாஸ் ராகவனால் 2019 டிசம்பர் 14, 15 இல்
நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பு - வவுனியா



லகு ருத்ரசாதனை - வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Editor's copy

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 27
இதழ்: 62

ஜனவரி
ஏப்ரல்
2020

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்கள்:**
திரு.S.R. சரவணபவன்
தொ.பே - 021 222 5442

திரு.க.கனகரத்தினம்
தொ.பே - 021222 2323

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 100.00
வருடச் சந்தா ரூபா 250.00 (2 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
166/5, சேர்.பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Co-ordinating Committee Northern Zone
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

## உள்ளே......

- ஒற்றுமை தூய்மை தெய்வீகம் - ஆசிரியர் 2
- ஸ்ரீலங்கா விஜயம் - கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் 4
  அறிமுகம்
  நேர அட்டவணை
  கொழும்பில் 08.12.2019 ல் நடந்த பயிற்சி முகாம் 8
  தலவாக்கலையில் 09.12.2019இல் நடந்த சத்சங்கம்
  சத்தியசாயி பாடசாலையில் நடந்த பயிற்சி முகாம் (11,12,13- டிசெம்பர் 2019)
  யாழ்.சாயி நிலையத்தில் சத்சங்கம் 15
  பருத்தித்துறை சாயி நிலையத்தில் சத்சங்கம் 17
  வவுனியாவில் நடந்த பயிற்சி முகாம் (14 & 15.12.2019) 18
  சாயி ஆன்மீகக் கல்விக்கான சர்வதேச கட்டமைப்பு 24
- பின் சேர்க்கை ஆசிரியர் 25
- அறிவை எப்படித் திறனாக்குதல் 26
- சாயி ஆன்மீகக் கல்வியைப் பற்றிய வரலாற்று சுருக்கம்
- இரண்டு வகை நான் 27
- கொடைக்குக் கர்ணன் - பகவானின் அருளுரை 28
- ருத்ர சமகம் - 11ஆவது அனுவாகம் 29
- வூல்வ் மெசிங் ருஷ்ய ஞானி 31
- யாதும் ஊரே யாவரும் கேளிர் 33
- தூய்மையை எவ்வாறு விருத்தி செய்யலாம்? 34
- சுவாமி மருத்துவர்க்கெல்லாம் மருத்துவர் 35
- நிறுவனச் செய்திகள் 40

**ஆகஸ்ட் – டிசம்பர் 2019 சஞ்சிகை அச்சிடப்படவில்லை**

**(ஆ-ர்)**

**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**

**இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தமிழ்ச் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# ஒற்றுமை தூய்மை தெய்வீகம்

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலக மாநாடு பிரசாந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. அம்மகாநாட்டின் மையப் பொருள் ஒற்றுமையே தெய்வீகம், தூய்மையே ஞானம் என்ற இரண்டு மணிமொழிகளேயாகும். இதற்காக சத்திய சாயி சர்வதேச நிறுவனம் இரண்டு கையேடுகளை வெளியிட்டுள்ளது. அதில் கோட்பாட்டை விளங்குவதற்காகவும் வாழ்க்கையில் பின்பற்றுவதற்காகவும் பின்பற்றிய உதாரண மகான்களின் வாழ்க்கையென மூன்று உப தலையங்கங்களில் சுவாமியின் சகல அருளுரைகளிலிருந்தும், வாஹினித் தொடர் நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் தெரிந்தெடுக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளன. தனிநபர், குடும்பம், சமூகம், நிறுவனம் இயற்கையில் எப்படிப் பின்பற்றவேண்டும் என்ற கோட்பாடுகள் தேர்ந்து தரப்பட்டுள்ளன.

இது பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு எல்லா அடியார்களுக்கும் கிடைக்க வழியமைக்கப்பட்டுள்ளது. இம் மகாநாட்டிற்கு எம்மைத் தயார்படுத்தும்படி தரப்பட்ட கையேடுகளை கல்வி வட்டங்களில் விரிவாகப் படித்து வாழ்க்கையில் பின்பற்றி ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளோம்.

ஒரு பதத்திற்கு பல கருத்துக்கள் இருக்கலாம். நாம் இதை மனதில் வைத்துக் கூறப்பட்ட கருத்துக்களை தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். உதாரணமாக UNITY என்ற சொல்லை எடுப்போம். கணிதவியலில் இது ஒன்றைக் குறிக்கின்றது. எல்லா எண்களும் ஒன்றின் கூட்டேயென்று விளங்கிக் கொள்ளவேண்டும். ஆன்மீகத்தில் 1+1+1+1= 1 என்ற உள்ளார்த்தத்தை உள்வாங்கவேண்டும். சமூகவியலில் சமூக ஒற்றுமையைக் குறிக்கின்றது. சாதி, மத, இன அடிப்படையில் பிரிவில்லாது ஒற்றுமையாக வாழ்வதையே குறிக்கின்றது. சமூகத்தில் குடும்பங்களும் தனி நபர்களும் சேர்ந்துள்ளன. தனி நபர் மட்டத்தில் எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் ஏற்படவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே கலாச்சாரம், ஒழுக்கம் பழக்க வழக்கங்களுக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் அத்திவாரமாயுள்ளது. இது ஏற்பட்டாலே சாந்தி, சமாதானம் உலகத்தில் ஏற்பட்டு நிலைத்து நிற்கும். சத்தியசாயி நிறுவனத்திலும் இது கடைப்பிடிக்கப்பட்டு சகல அணிகளும் இணைந்து செயற்படவேண்டும். அதாவது எல்லோரும் ஒரு எண்ணம் , ஒரு சொல், ஒரு செயல் என்ற கட்டுப்பாட்டிற்குள் இணைந்து செயற்படவேண்டும்.

இணைந்து செயற்படுவதில், படைத்தவன் - படைப்பு - மனிதன்: நனவு நிலை - விழிப்புணர்வு - உள்ளுணர்வு (மனச்சாட்சி): பக்தி - கர்ம - ஞானம்: உடல் - உளம் - ஆத்மா: சத் - சித் - ஆனந்தம் - நாமம் - ரூபம்: ஆளுமையில் பௌதீகம் - மனம் - புத்தி - உணர்ச்சி- ஆன்மீகம், என்ற சகல நிலைகளிலும் இணைதல் வெளிப்படவேண்டும்.

அறிவு திறனாக்கப்பட்டு சமநிலை ஏற்பட்டு அகப்பார்வை மூலமாக ஆன்மீகப் பாதையில் முன்னேறலாம்.

இறுதியாக எல்லாம் ஒன்றே என்ற புரிந்துணர்வும் அனுபவமும் ஏற்பட வேண்டும். இதற்காக தன்னலமற்ற சேவை, நிபந்தனையற்ற அன்பை விருத்தி செய்து முரண்பாடுகள் இல்லாத சாந்தி நிலையை உலகில் உருவாக்குவோம். நாமம், ரூபம் மறைந்து சத், சித், ஆனந்தம் மட்டும் நிலைபெற்றால் சாந்தி நிலவும். இதைப் பின்வரும் சுவாமியின் கூற்று தெளிவாக்குகின்றது.

"உள்ளது ஒரே சாதி அது மானிட சாதி
உள்ளது ஒரே மொழி அது இதய மொழி
உள்ளது ஒரே மதம் அது அன்பெனும் மதம்
உள்ளது ஒரே கடவுள் அவர் எங்கும் எப்போதும் வியாபித்துள்ளார்."

அடுத்ததாக தூய்மை (PURITY) என்பதைப் பற்றிப் பார்ப்போம். எல்லாம் ஒன்று என்ற நிலையை அடைவதற்கு எம் மனதில் உள்ள 6 உள் எதிரிகள் தடையாயுள்ளன. ஆன்மீக சாதனைகளின் நோக்கமே தூய்மையை அடைவதே யாகும். தூய்மை அடைந்தால் எமது எண்ணம், சொல், செயல் உணர்வு எல்லாமே மனச்சாட்சி அல்லது உள்ளுணர்வின்படி இயங்கத் தொடங்கி விடும். மனச்சாட்சி, உள்ளுணர்வு, இறைவனின் குரல், ஆத்மா, ஐந்து அடிப்படை விழுமியங்கள் எல்லாம் ஒன்றிலே அடங்கி ஒன்றையே குறிக்கின்றன.

இதயத் தூய்மை அடைவதற்கு திரிகரண சுத்தியும் (மனம், வாக்கு, காயம்) அந்தக்கரண சுத்தியும் (மனம், சித்தம், புத்தி, அகங்காரம்) தன்னலமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையும் சாத்வீக சுத்த உணவும் தெய்வீக அன்பின் வெளிப்பாடும், ஞான சித்தியை, ஏற்படுத்தும். தெய்வீகம் அல்லது ஞான சித்தியில் பரவச நிலை ஏற்படும். இம் மைய வாக்கியங்களை விளங்குவதற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள அருளுரைகளை படிக்க வேண்டும்.

(சத்திய சாயி அருளமுதம்)

- ஒற்றுமையே தெய்வீகமாகும். பாகம் 16 (31.10.1988)
- சமுதாய ஒற்றுமைக்கு சேவைச் செயல்கள் - பாகம் 16: 21.07.2002
- தனி நபரிலிருந்து தெய்வீகம் வரை - 6ஆவது உலக மகாநாடு: 20.11.1995
- ஒற்றுமை, புனிதம் தெய்வீகத்திற்காக போராடுங்கள்: பாகம் 16: (01.01.2003)
- வேற்றுமையில் ஒற்றுமை காண்பது உண்மையான ஆன்மீகம் - பாகம் 16: 31.05.2003
- ஒற்றுமை, தூய்மை தெய்வீகம் - 17.08.2005
- சாயி மதம் - 01.10.1976
- தர்மச் சக்கரவர்த்தியும் மேன்மையான மக்களும் - பாகம் 26: 30.08.1993
- மாணவர்களும் சாத்வீகத் தூய்மையும் - பாகம் 18 29.12.1985
- இதயத் தூய்மையே உண்மையான ஆன்மீகக் கட்டுப்பாடு. - பாகம் 38 (09.10.2005)
- மூன்று உடைமைகளைப் பாதுகாக்க வேண்டும். பாகம் 42: 06.07.2009

பூரண சரணாகதியே அதி உச்ச வழியாகும்.

"அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய். எப்போதும் உதவி செய். ஒரு போதும் தீங்கு செய்யாதே. இதுதான் பிரேம மார்க்கம்" - சத்திய சாயி பாபா

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"

இதுவே எமது பிரார்த்தனையுமாகும்.

ஜெய் சாயிராம்

- ஆசிரியர்


## தேசிய சேவைத் திட்டம்

1



**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 112687014, 0094 777316935
E mail - info@ssiosrilanka.org
website: www.ssiosrilanka.org


95 YEARS OF SELFLESS LOVE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி ஸ்ரீனிவாஸ் ராகவன் Ms, Phd, MBA அவர்களின் ஸ்ரீலங்கா விஜயம்

இவர் அமெரிக்காவில் வசிக்கின்றார். கணனி தொழில் நுட்பத்தில் பட்டங்கள் பெற்று அத்துறையில் உயர் பதவி வகிக்கிறார். 25 வருடங்களுக்கு மேலாக சுவாமியின் சேவையில் ஈடுபட்டுள்ளார். இவருடைய இல்லமே ஒரு சாயி நிலையமாக இயங்குகிறது. பல நாடுகளில் மனித விழுமியங்களிலும் சாயி ஆன்மீகக் கல்வியிலும் தலைமைத்துவத்திலும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தி வருகின்றார்.

சத்தியசாயி சர்வதேச கல்விக் குழுவின் அங்கத்தவராகக் கடமை புரிகின்றார். முன்னர் தலைவராகவும் செயற்பட்டார். சத்திய சாயி ஆன்மீகக் கல்வியையும் சத்திய சாயி பாடசாலையைத் தரமாக்குவதற்காகவும் அடியார்களுடன் கலந்துரையாடவும் எமது நாட்டிற்கு விஜயம் செய்தார். அவரின் நேர அட்டவணையும் நடாத்திய பயிற்சிப் பட்டறைகளின் சாராம்சமும் இவ்விதழில் பதிக்கப்பட்டுள்ளன.

**நேர அட்டவணை:- (2019)**

27 - 28:- ஜூலை மாதம் 2019ஆம் ஆண்டு கொழும்பில் சாயி ஆன்மீகக் கல்வி குருமார்களுக்கு பயிற்சி நடாத்தப்பட்டது.

08.12.2019- கொழும்பு பான்ஸ் பிளேஸில் நடந்தது.

09.12.2019:- தலவாக்கலை சாயி நிலையத்தில் நடந்தது.

11, 12, 13 டிசம்பர்:- சத்தியசாயி பாடசாலை, மானிப்பாயில் நடந்தது.

11.12.2019:- சத்திய சாயி நிலையம், யாழ்ப்பாணத்தில் நடந்தது.

12.12.2019:- சத்திய சாயி நிலையம், பருத்தித்துறையில் நடந்தது.

14, 15 டிசெம்பர்:- வவுனியாவில் றோயல் தோட்ட மண்டபத்தில், தேசிய அளவில் நடந்தது.

..........................................

## 27- 28 ஆம் திகதி ஜூலை 2019 அன்று கொழும்பில் நடாத்திய பயிற்சிப் பட்டறையின் தொகுப்பு

சாயி ஆன்மீகக் கல்வி 50 வருடங்களாகச் செயற்படுகின்றது. இக் கல்வி ஒன்பது மகளிருடன் தொடங்கியது. இதன் நோக்கம் பிள்ளைகளில் ஓர் முழுமையான ஆளுமையை விருத்தி செய்வதேயாகும். சாயி ஆன்மீகக் கல்வி மாணவர்களிலும் குருமார்களிலும் சுவாமி அதிகளவு அன்பு கொண்டுள்ளார். உரிமையையும் கூறியுள்ளார்.

சில சமயங்களில் இக் கல்வியின் சில பகுதிகளில் அதிக பற்று வைத்து குறிக்கோளை மறந்து விடுகின்றோம்.

உ+ ம்- ஒரு பணக்காரன் ஆன்மீக ஞானத்தை அடைவதற்காக செல்வங்களைத் துறந்து மலைக் குகையில் ஒரு கற்பாறை மீது உட்கார்ந்து சாதனை செய்தார். எப்போதும் அக்கற் பாறையில் உட்கார்ந்து சாதனை செய்வார். ஒருநாள் ஆற்றில் குளிக்கப் போனபோது இன்னொருவர் வந்து அக்கற்பாறையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு மிகவும் கோபமுற்றார்.

எல்லாவற்றையும் துறந்தவர் கற்பாறை மீது பற்றை வைத்துக் கொண்டுள்ளார். நாமும் இவ்வாறு சிலவற்றில் பற்று வைத்து விடுகிறோம்.

<u>செயல்- 1</u>

முதலில் அங்கிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக 5-6 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து வெளியே போய் கடவுளுடன் தொடர்பு கொள்ளச் சொன்னார். பின்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குழுவும் கையடக்கத் தொலைபேசியில் படமும் (Selfi) எடுக்கச் சொன்னார். எங்களின் அனுபவத்தைச் சிந்திக்குமாறு சொன்னார். கடவுள் தன்னைப் பலவாகப் பிரித்ததை நினைவு படுத்தவே இச் செயலைச் செய்யச் சென்னார். பின்பு படம் எடுக்க ஒன்று கூடினோம். அப்போது இயற்கைக் காட்சிகளையும் படம் எடுக்கச் சொன்னார்.

இச் செயற்பாட்டின்போது ஒரு குழுவினர் தெருவிலுள்ள திசைக் குறிப்பீட்டைப் படம் எடுத்தார்கள். அத் தெருத் திசைகாட்டிபோல் நாமும் திசை காட்டிகளாக இருக்கவேண்டும் என்று விளக்கம் கொடுத்தார்கள். ஒரு காட்சியிலேயே எவ்வளவோ கற்றுக் கொள்ளலாம்.

- இக்கல்வி பாலவிகார் என்ற பெயரில் தொடங்கி பாலவிகாஷ் என்ற பெயருக்கு மாற்றப்பட்டு, இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் சாயி ஆன்மீகக் கல்வி என்று கூறப்படுகின்றது. இம் மாற்றத்தை பகவானே ஏற்படுத்தினார்.
- பிள்ளைகளை மேம்படுத்த அவர் களைத் திருப்திப்படுத்த குருமார் தங்களை மாற்றிக் கொள்ளத் தயங்கக்கூடாது.
- நான் எப்போதும் கேள்விகளையே கேட்பேன். நீங்கள் தான் மறுமொழி கூற வேண்டும். நீங்கள்தான் சிந்தித்து ஆராய வேண்டும். எப்போதும் என்ன? யாருக்கு? எப்படி? எப்போது? என்ற கேள்விகளைக் கேட்டுத் தெளி வடைய வேண்டும்.

**என்ன?** ஒழுக்கத்தை விருத்தியடையச் செய்தல்

மனச்சாட்சியை தூய்மையாகவும் தெளிவாகவும் ஆக்குதல்

முழுமையான ஆளுமை வளர்ச்சி உன்னத மாற்றம் என்பதை ஏற்படுத்துதல்.

**யாருக்கு?-** பிள்ளைகளுடன், மனித விழுமியங்களில் ஆர்வ முள்ளவர்களுக்கு

**எப்படி?** - சாயி கல்வி முறை மூலம் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிக்கொணரவும் 5 HV, 5 TT, Practice of HV, தன்னலமற்ற சேவை மூலமும்.

**எப்போது?- சிறு பிள்ளையிலிருந்தே தொடங்கவேண்டும்.**

**எங்கே?-** எங்கெல்லாம் செய்ய முடியுமோ செய்ய வேண்டும்.

தத்துவங்களை விளங்க வேண்டும். அதில் நம்பிக்கை இருக்கவேண்டும்.

பிள்ளைகளில் கரிசனை வேண்டும். இதை எப்போதும் அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

மனம் தெளிவடைவதற்கு அதில் நிரம்பியிருப்பதை முதலில் அகற்ற வேண்டும். குரு தண்ணீர் தாங்கி என்றால் பிள்ளைகள் டப் (Taps) ஆவார்கள். தாங்கியில் இருப்பதே பைப்பில் வெளிவரும்.

உ-ம்:- சூரியனும் புல்லும்.

குளிர் காலத்தில் புல்லு காய்ந்து போய் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். கோடைக்காலத்தில், சூரிய வெப்பம் பனிக்கட்டியை உருக்கி புல்லை வளரவிடும். சூரிய வெப்பம் பட்டதும் புல்லு பச்சைப் பசேலென வளரத் தொடங்குகிறது. சூரியன் கடவுளென்றால் புல்லு மனிதனாகும்.

**கல்வி கற்பிக்க யார் தகுதியானவர்கள்?**

- எண்ணம், சொல், செயல் ஒன்றாகவும் தூய்மையாகவும் இருக்கவேண்டும்.
- வித்தியாசம் காட்டப்படாமை.

  மனித, இன, மொழி, பணக்காரன், நல்லது கெட்டது என்று வித்தியாசம் காட்டப்படாமை.

  கடவுள் ஒருபோதும் வித்தியாசம் காட்டுவதில்லை.
- எல்லோரையும் அரவணைக்கவேண்டும். மனிதன் வேறுபாடு பார்ப்பான். கடவுள் பேதம் காண்பதில்லை.
- தேவைப்படும்போது மட்டும் கதைத்தல் தெய்வீகமானது.

எல்லாம் தெரிந்தவர் கடவுள். ஒருமுறை நேர்காணலுக்கு ஜேர்மனியரை கூப்பிட்டார். சுவாமி அவர களுடன் ஜேர்மன் மொழியில் கதைத்தார். கடவுளுக்கு எல்லாம் தெரிந்தாலும், தெரிந்தது என்று காட்டிக் கொள்ள மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாம் கடவுளுடன் தொடர்பு கொண்டிருக்கவேண்டும். தூரப் போவது, மனிதத்துவம்.
- பலவாகப் பார்ப்பது மனிதத்துவம்,

  ஒன்றாகப் பார்ப்பது தெய்வீகம்.
- மாணவர்களைப் பாதுகாக்கவேண்டும்.

  பெற்ற தாயிலும் பார்க்கக் கூடிய கரிசனை இருக்க வேண்டும்.
- தெய்வீகமான நடத்தை தெய்வீகம்.

  தெய்வீகமும் தெய்வீகமாக மாறுவதும் ஒன்றே. துவைதத்திலிருந்து அத்வைதத்திற்கு உயரவேண்டும்.

**குரு மனிதத்திலிருந்து தெய்வீகத்திற்கு உயரவேண்டும்.**

- சுவாமியிலும் மனித விழுமியங்களிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- ஆசிரியராக வருவதில் ஆர்வம் இருக்க வேண்டும்.
- தரமான பயிற்சி எடுத்திருக்கவேண்டும்.

**எண்ணிக்கையல்ல. தரமே முக்கியம்.** தரம் உயர்வாயிருந்தால் எண்ணிக்கையும் உயரும். சாயி ஆன்மீகக் கல்வி ஒரு வகுப்புக் கல்வியல்ல. இது ஆன்மீகத்துடன் கூடிய வாழ்க்கை. குருவுக்கும் ஆசிரியருக்கும் உள்ள வித்தியாசத்தை சுவாமியின் கூற்று விளங்க வைக்கிறது. இது சத்தியசாயி அருளமுதம். பாகம் - 12 இல் உள்ளது.

ஆசிரியர் தகவல்களைக் கொடுப்பதுடன் சில திறன்களையும் வளர்க்க உதவுவார். குரு ஆன்மீக முன்னேற்றத்திலேயே குறி வைத்து இயங்குவார்.

குறுகிய காணொளி காட்டப்பட்டது. அதில் சுவாமியின் அருளுரையின் சிறிய பகுதியும் ஆங்கிலத் தலைப்புகளும் இருந்தன.

"ஒவ்வொருவரின் உள்ளே சகல அறிவும் உள்ளது. அந்த அறிவைத் திறனாக்க வேண்டும். திறனாக்கினால் சம நிலை எழும். சம நிலை எழுந்தால் உட்பார்வை புலப்படும். உட்பார்வை கிடைத்ததும் முக்தி கிடைக்கும். அறிவைப் பிழையாக உபயோகித்தால் அழிவே நிகழும்".

**Knowledge → Skill → Balance → Insight Liberation**

மாணவனின் நடத்தை சரியில்லாவிட்டால், ஏ! உனது நடத்தை சரியில்லை என்று சொல்லாமல், "நீ தெய்வீக மானவன். ஆனால் நடத்தை தெய்வீகமானதில்லையே" என்று சொல்லவும்.

நான், எனது என்ற நிலையிலிருந்து நாம், எமது என்ற மனப்பாங்கை வளர்க்கவேண்டும்.

**கற்பித்தல் திறனில் :**

விழிப்புணர்வு Awarenes

உத்வேகம் - Inspiration

அனுபவம் - Experience

தகவலுக்கும் அனுபவத்திற்கும் இடையே உள்ள தொடர்பு.

கவர்ச்சி Attractive

இவையெல்லாம் அடங்கும்.

மாணவர்கள் அநேகமாக தங்களுடைய சிநேகிதர்களைச் சந்திக்க விரும்பியே வருவார்கள்.

**ஆசிரியரும் மாணவரும்**

என்ன எதிர்பார்ப்பு ஆசிரியர், மாணவன் யாராகிலும் மாணவராகலாம். வயது எல்லை யில்லை. ஆனால் மாணவனாக இருக்க வேண்டு மென்ற ஆசை முக்கியம். இத்துடன் சுய விருப்பம், தயார்நிலை, ஆர்வம், விட்டுக் கொடுத்தல், அகங்காரமின்மை எல்லாம் இருக்க வேண்டும்.

சுவாமியே எல்லாவற்றையும் பின்னின்று நடத்துகிறார் என்பதில் நம்பிக்கை அவசியம். மகாபாரத போரின் போது கிருஷ்ணருக்கு 85 வயது. அர்ஜுனனுக்கு 83 வயது என்றாலும் ஆசிரியராகவும் மாணவனா கவும் செயற்பட்டார்கள். எங்களைத் தகுதியாக்கித் தயார் நிலையில் எம்மை வைத்திருக்க வேண்டும்.

தியாகத்தின் மூலமே கடவுளை எம் பக்கம் திருப்பலாம். எமது நோக்கு கடவுளை அடைவதே யாகும். இதன் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை (மனத் தைரியம்)
சுய திருப்தி
தியாகம்
தன்னை அறிதலாகும்.

எப்போதும் நாம் பின்பற்று வதையே சொல்லிக் கொடுக்க வேண்டும். பகவத் கீதையில் உள்ள ஒரு சுலோகத்தைத் தீவிரமாகப் பின் பற்றினால் ஏனைய சுலோகங்களின் உள் அர்த்தம் தெளிவாகிவிடும். பொருத்தமான சுலோகம்

"அனன்யாஸ் சிந்தயந்தோமாம் யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகஷேமம் வஹாம்யஹம்!" (9:22)

குரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். எண்ணம், சொல், செயல், நடை, உடை பாவனை எல்லாமே முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

குருவே பாடத் தயாரிப்பு
குருவே பாடத் திட்டம்
குருவே கற்பிக்கும் முறைகளாக இருப்பீர்கள்.
எதிலும் பூரணமாக இருப்பதோ செயற்படுதலோ அதுவே மனித விழுமியமாகும்.

மாணவர்களின் உன்னத மாற்றத்திற்கு மதிப்பளிக்கவும், பாடத் திட்டத்திற்கல்ல. பிள்ளைகள் தான் முக்கியம். உங்கள் அனுபவத்தை அவர்களுடனும், அவர்களின் அனுப வத்தை உங்களுடனும் பகிர வேண்டும்.

உன்னத மாற்றம் என்ற நோக்கிலே குறியாக இருக்க வேண்டும்.

வேதம், சுலோகம், பஞ்ச புராணம் சொல்லிக் கொடுப்பதற்கு வேறு வகுப்பை நடத்தலாம். சர்வ மதக் கொள்கையைப் பின்பற்றவேண்டும்.

சாயி ஆன்மீகக் கல்வியில், இறைவனே மையமாக வைக்கப்பட்டுள்ளார்.

சாயி மனித மேம்பாட்டுக் கல்வியில் இறைவனையல்ல மனித மேம்பாடுகளையே மையமாக வைக்கப்பட்டுள்ளன.

**சில செயற்பாட்டு துணையுதவிக் குறிப்புக்கள்**

- பெரியோரை மதிக்கவும்
- அவர்கள் எவ்வாறு சுவாமியிடம் வந்தார்களென அறியவும்
- மூத்த குருமாரின் பின்னணியைத் தெரியவேண்டும்
- இறைவனில் பக்தி பூணவேண்டும்.
- வகுப்பில், பிள்ளைகளைத் தெய்வமாக நோக்கவேண்டும்
- பெற்றோர் முக்கியமாகத் தாய்மார், இந்த வகுப்புக்களில் விருப்பம் கொள்ளவேண்டும். அவர்களை வீட்டில் போய்ச் சந்திக்கவேண்டும்.
- இறைவனிலும், பிள்ளைகளிலும் அமோக அன்பு காட்டவேண்டும்.
- போதியளவு நேரம் ஒதுக்கவேண்டும்.
- பாடங்களைத் தயார் பண்ணவேண்டும்.
- பிள்ளைகளில் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும்
- பிள்ளைகள் வகுப்பு வருவதற்கு மிகவும் ஆர்வமாயிருக்கச் செயற்படவேண்டும்.
- பிள்ளைகளுக்கு எதில் நாட்டமுண்டோ, அதிலிருந்து வகுப்பை ஆரம்பிக்கலாம்.
- வலியுறுத்தி உறுதியாகச் சொல்லவேண்டும்.
- எங்கெங்கே நடமாடுகிறீர்களோ அங்கெல்லாம் வகுப்பே என்று நினைக்கவேண்டும்.
- ஒரு போதும் மற்றவர்களிடமிருந்து கற்பதற்குத் தயங்கக் கூடாது.
- பஜனையில் - உடல் அசைவு அளவுக்கு மீறக் கூடாது
  - மனம் கருத்தில் நிலைக்கவேண்டும்.
  - உணர்வு ஆத்மாவில் நிலைக்கவேண்டும்.
  - சுருதியே சத்தியம்.
  - மனச் சாட்சி மிளிர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 08.12.2019 அன்று கொழும்பில் நடந்த சத்சங்கத்தின் சாராம்சம்:

இளம் சந்ததியினருக்கும் வளர்ந்தோருக்குமான இரு அமர்வுகள் நிகழ்ந்தன.

ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைவதற்கு விசாரணை முக்கியமானதாகும். இந்த அமர்வின் நோக்கம் என்ன என்று இளைஞர்களிடம் கேட்கப்பட்டது. ஆன்மீகத்தைப் பற்றியும், சுவாமியின் போதனைகளைப் பற்றியும் கலந்துரையாடல் நிகழ்ந்தது. இளைஞர்களின் பங்கு பற்றுதலில் ஆர்வத்தைக் காணமுடியவில்லை என்று குறிப்பிட்டார். இளைஞர்கள் ஆர்வமாகப் பங்கு பற்றச் செய்யும் பொறுப்பு சாயி நிறுவன உத்தியோகத்தினருக்கு உண்டு என்றும் எல்லோரையும் பங்கு பற்ற வைக்கவேண்டுமென்றும் கூறினார். நிகழ்வின் பிரயோசனத்தை எல்லோருக்கும் அறிவித்து சுவாமியிடமும் பிரார்த்திக்க வேண்டும். பங்கு பற்றுவதை கட்டாயமாக்க முடியாது. நிறுவன நிர்வாகிகள், தமது உன்னதமாற்றத்திலே நோக்கமாகவும் சுவாமியின் போதனைகளை மையமாகவும் கொள்ளவேண்டும்.

எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் இருக்கவேண்டுமென்று சுவாமி கூறிய கூற்றுக்களில் கவனம் செலுத்தப்பட்டது. அறநெறி (தர்மம்) நடத்தை மூலமே கடவுளுடன் நாம் தொடர்பு ஏற்படுத்தலாம். நாம் வெளியில் காணும் காட்சிகள் அனைத்தும் எமது மனதில் உள்ள பதிவின் பிரதி பிம்பங்களேயாகும். விடா முயற்சியுடன் எண்ணம், சொல், செயலில் ஒருமையையும் தூய்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். சுவாமியின் அருளுரைகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் உதாரணங்கள் கொடுக்கப்பட்டன.

கர்ம வினையைப் பற்றிக் கேட்ட பொழுது அதை ஒரு தப்பும் வார்த்தையாகப் பாவிக்காமல் ஆழமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்று சொன்னார்.

ஆசைக்கு வரம்பு என்ற வாக்கியத்தை விளக்கும்போது ஆசைகள் எழுந்தாலும் அதற்காக செயலில் அவசரப்பட்டு இறங்கக்கூடாது. இவற்றை ஒழித்துவிடவேண்டும் என்று கூறப்பட்டது. இதேபோல நாம் எமது உணர்ச்சியை வெளிப்படுத்தும் பொழுதும் எங்கே? எப்படி? என்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஜெய் சாயிராம்!

(தொகுப்பு :- சாயி சகோதரி சண்முகப்பிரியா)

.............................................

### டிசம்பர் மாதம் 9ஆம் திகதி தலவாக்கலை நகர சபை மண்டபத்தில் நடந்த சத்சங்கம்

கடவுள் ....

அந்த சத்சங்க நிகழ்வு மரபு ரீதியானதாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. பிரசாந்தியில் சுவாமியின் முன்னிலையில் நாம் பெற்றுக் கொள்கின்ற அனுபவ சந்திப்பாக அக்கணம் மாறியது. ஒருவித ஆனந்த பரவசம் அந்த மண்டபத்தை அரவணைத்துக் கொண்டது.

கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்கள் அனுபூதியை பருகிய நிறைந்த தேஜசுடன் சத்சங்க மண்டபத்தின் உள் நுழைகிறார். அனைவரும் "சாயிராம்" என மரியாதை செய்து எழுந்து நின்று வர வேற்கின்றனர். வந்தவர் முன் வரிசையில் ஆண்கள் அமர்ந்திருந்த பக்கம் ஒருவரின் பாதத்தையும், பெண்கள் அமர்ந்திருந்த பகுதியில் தாய் ஒருவரின் பாதத்தையும் தொட்டு யாரும் எதிர்பார்க்காத வேகத்தில் நமஸ்காரம் செய்து முடித்தார். அதன் பிறகு மண்டபத்தை நோக்கி புன்னகை செய்கிறார். மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை உணர சில நிமிடங்கள் கடந்தன. சுவாமியின் அணுக்கத் தொண்டர், அமெரிக்க கலிபோர்னியாவில் வாழ்கின்றவர், நீண்ட காலமாக சுவாமியுடனே இருப்பவர், உலகம் தழுவிய பல் வேறு பதவி நிலையில் சாய் சேவை புரிபவர், கல்விமான் இன்று எங்களுக்கு சத்சங்கம் செய்ய வருகின்றார். அபரிமிதமான எதிர் பார்ப்பு, மரியாதை கலந்த பயம், தயக்கம் எல்லாம் அவரது சில நிமிட நேர நடத்தையால் தகர்த் தெறியப் பட்டது.

கலாநிதி பேசுகிறார் "நான் தரிசனம் பெற்றாச்சு", "பிரசாதம் இருந்தாக் குடுங்க" நான் புறப் படுகிறேன். தெளிவாக இருதயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து வார்த்தைகள் வெளி வருகின்றன. அது அதிர்வைத் தருகிறது. அர்த்தம் புரிகிறது. ஆனால் சொல்லத் தெரியாத சொல்லில் முடியாததாக......

அது ஒரு மரபு சார்ந்த அணுகு முறையை கொண்டிருக்காத ஒரு அமர்வு என மேலே குறிப்பிட்டது போல பேசுகிறவருக்கும் கேட்பவர் களுக்கும் இடையே காணப்பட்ட பல தடைச் சுவர்கள் உடைந்தன. வீட்டிலுள்ளவொருவர் சில காலங்கள் வெளியிடத்தில் வேலை செய்து பின் விடுமுறையில் வீடு வந்த ஒரு மகனைப் போல், ஒரு சகோதரனைப் போல், தந்தையைப் போல், நண்பனைப் போன்ற நெருக்கம் அது. அது ஒன்று என்னும் உண்மைக்குள் மூழ்கிய அழகிய தருணம். எப்படி இருக்கீங்க? ஒவ்வொருவரையும் உற்று நோக்கிக் கதைக்கிறார். ஒரு அநாயச தெய்வீக வாசம் மண்டபம் எங்கும் பரவுகின்றது.

"போதும் நமக்கு தரிசனம் கிட்டியாச்சு. என்ன இனி கதைக்க இருக்கு" ஒரு மணித்தியால சத்சங்கம் ஒரு 5, 10 நிமிடங்களில். நிறைவேறியது. எங்கும் அவர் தானே இருக்கிறார்.

அப்ப கடவுள் எங்கே இருக்கிறார். பகவான் எங்கே இருக்கிறார். இந்த நேரடியான உரையாடலில் அடியார் கள் தம்மை சுதாகரித்துக் கொள்ளத் தெரியாமல் பதிலும் சொல்லத் தெரியாமல் அவையில் அசை யாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கலாநிதி விடவில்லை. சொல் லுங்க கடவுள் எங்கே இருக்கின்றார்? மௌனம்.................

கோயிலுக்கு ஏன் போகிறீர்கள் ..... சாமி கும்பட ..... அடியவர்களின் பதில். அப்ப கடவுள் கோயிலில்தான் இருக்கிறார் சரியா? .... சிலர் ஆமோதிக்கின்றனர். ......... உடனே கோயிலில் மட்டும் தான் கடவுள் இருக்கின்றார் சரிதானே. அந்தவேளை மண்டபத்தின் பின் வரிசையில் உள்ள ஒரு சாய் ஆன்மீக கல்வி மாணவர் ஒருவர் எழுந்து (பாலவிஹாஸ்) சாய்ராம் சேர் பசுவின் உடல் முழுவதிலும் இரத்தம் நிறைந்திருக்கிறது. ஆனால் அந்த இரத்தம் பசுவின் மடியில் மாத்திரம் பாலாய் சுரக்கிறது. அதுபோல கடவுள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தாலும் ஆலயத்தில் சிறப்பாக நின்று கடவுள் அருள் புரிகிறார் என பதில் சொன்னார். இப் பதிலால் கலாநிதி மிக்க மகிழ்ச்சியடைந்தார். கற்றல், கற்பித்தலின்போது கற்றல் பேறுகள் பிரதான நோக்கமாகக் கொள்ளப்படும். அந்த நோக்கத்தை மாணவர்கள் அண்மிக்கும் போது நேர் மனப்பாங்குகள் உருவாக்கம் பெறுகின்றன. இப்போது பிரதான தலைப்பு தெளிவாகியது. பாலர்களின் மலர்வு (பாலவிஹாஸ்) கல்வி கற்பித்தலின் அவசியம். சுவாமியின் உன்னதமிக்கதான பிரகடனம் அவதார நோக்கம் அன்பே எங்கும் வியாபித்துள்ளது எனும் சர்வவியாபகம் பற்றிக் கூறித் தனது காந்த சாரீர குரலில் பஜனை செய்கிறார். உண்மையாக பஜன் என்பது அது சாதாரணமாக தெய்வீகப் பாடல் என்பதற்கு அப்பால் ஓர் பேருண்மையைப் புரிய வைத்தது. திருமுறைகள் பாடிய திருவருட் செல்வர்களின் பதிகங்கள் மாட்சிமை நிறைந்து காணப்படுகின்றன.

கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்களின் பஜனைகளும் அதன் பொருள் விளக்கங்களும் பதிகங்களின் இனிமையையும் பலனையும் ஒன்றாகக் காணுகின்ற நிலைமையைப் புரிய வைத்தது. திருமுறைப் பாடல்களின் உணர்வு சாயி பஜனைகளிலும் அதே உணர்வைக் கொடுப்பதாக உள்ளது. சாய் பஜனை தனியாக சாதனை செய்ய வேண்டிய அவசியப்பாட்டினை வலியுறுத்தியது. நேரடியாக பகவானுடன் உள்ளார்ந்த உறவினைக் கொண்டுள்ளது.

மீண்டும் கலாநிதி "கடவுளை பார்த்தது உண்டா?" "பாத நமஸ்காரம் பெற்றதுண்டா?" எனக் கேள்வி கேட்கின்றார்.

சுவாமி மாதாவாக, பிதாவாக, குருவாக, பந்து சகாவென ஏன் நாம் கூறுகின்றோம். அப்போது கடவுள் பரிபூரணமாக எங்கெல்லாம் ஊடுருவியுள்ளார். அவ்வாறெனில் தாய் கடவுள் இல்லையா? தந்தை கடவுள் இல்லையா? ஆசான் கடவுள் இல்லையா? உறவுகள் கடவுள் இல்லையா? இவர்களின் பாத நமஸ்காரம் கடவுளின் பாத நமஸ்காரம் ஆகாதா? அப்படியாயின் பகவான் வீடுகளில் இருக்கிறார் அல்லவா? தாய் தந்தை கமல சரணத்தில் மரியாதை செய்வது பெரிய ஆசீர்வாதம் அல்லவா? ஆத்மா அனுபூதி என்பது இதுதான் என்னும் கடவுள் பிரபாவத்தை தீட்சணமாகக் கூறக் கேட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பவர்களின் விழிகளில் ஆனந்த பாஷ்யம் வழிந்தோடியது.

கோடி பிரணாம் சதகோடிப் பிரணாம் ......... எனும் பஜன் தெய்வீக பெருநிலையை உருவாக்கியது.

ஸ்ரீ ராமச் சரணம் ஸ்ரீ ராமச் சரணம் ஸ்ரீ ராமச் சரணம் பஜே .... எனும் பஜன் பாத நமஸ்காரத்தின் பெருமதியை அடிக்கடி நினைவுபடுத்துவதைக் கூறுகிறார். ஸ்ரீராமர் வனவாசம் முடிந்து வரும்வேளை பாத குரடுவை வைத்து 14 வருடம் ஆட்சி செய்த இளவல் பரதன் மந்திரி பரிவாரங்களுடன் பிரபு ராமரை வரவேற்கச் சென்றார். பரதனைக் கண்ட ஸ்ரீ ராமர் பரதனையும் தன்னுடன் தேரினில் ஏற்றி தன்னருகில் இருக்கச் செய்தார். கூட வந்த மந்திரி பிரதானிகள் ராமருக்கு மாலை அணிவிக்க தயாராகும் போது இப்போது யார் ராமர்? யார் பரதன்? என கண்டு பிடிக்க முடியாமல் தவிக்கின்றனர். காரணம் இருவரது உருவமும் பாவமும் ஒன்றிணைந்திருப்பதைக் கண்டு வியந்தனர் பக்தி தியானம் ஆகும்போது எண்ணம், சொல், செயல் ஒன்றாகி எல்லாம் அதுவாக மாறுகிறது. தூய அன்பினால் பரதனும் ஸ்ரீ ராமரை நினைந்து நினைந்து அதுவேயாகினான். நீயும் கடவுள் என்பதை நீ அறியவில்லை என சுவாமி அத்வைத பேராற்றலினை விளக்கி அவதார பிரகடனமான படைப்பு முழுவதும் பரம்பொருள். பவித்திர வாழ்வு கடவுளை அறியச் செய்யும் எனக் கூறி நிறைவு செய்கிறார்.

(தொகுப்பு: ஸ்ரீ. **P.** இராஜகோபால்
பன்வில.)

..................................

**டிசெம்பர் மாதம் 11, 12, 13 ஆம் திகதிகளில் மானிப்பாயிலுள்ள சத்தியசாயி பாடசாலைக் குருமார்களுக்காக நடந்த பயிற்சியின் தொகுப்பு**

**11.12.2019**

நிகழ்வின் தொடக்கத்தில் பாடசாலை பணிப்பாளர் திரு. R. வசந்தசேனன் அளித்த வரவேற்புரையில் பாடசாலை 2003 ஆம் ஆண்டு தொடங்கியதென்றும் தற்போது 160 பிள்ளைகள் 10ஆம் வகுப்பு வரை படிக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

திரு. நா.புவனேந்திரன் பாடசாலை ஆளுகைக் குழு சார்பில் கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்களை அறிமுகமும் செய்தார். அவர் சாயி ஆன்மீகக் கல்வியிலும் சாயி மனித மேம்பாட்டுக் கல்வியிலும் மிகுந்த அறிவும் அனுபவமும் உள்ளவர் என்று சொன்னார். அவர் இசையில் ஆர்வம் உள்ளவர் என்றும் எப்போதும் கிற்றாரின் (Guitar) இசை மூலம் சுவாமியுடன் தொடர்பு ஏற்படுத்துபவர் என்றும் குறிப்பிட்டார்.

கலாநிதி ஸ்ரீநிவாஸ் அவர்கள் ஆசிரியரைப் பார்த்து உங்களுக்கு என்ன தேவை? என்ற கேள்வியுடன் தொடங்கினார்.

1. மாணவர்கள் என்ன கற்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?
2. மாணவர்கள் என்ன கற்க விரும்பு கிறார்கள்?
3. நீங்கள் என்ன கற்க விரும்பு கிறீர்கள்?

முதல் கேள்விக்குரிய முடிவுகளைக் கேட்டார். அவற்றைப் பாடசாலை தூரநோக்குடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் சொன்னார். மேலும் கேள்விகள் கேட்கப்பட்டன. ஒழுக்கத் தையும் நடத்தையையும் எப்படி அளவிடலாம்? நல்லது கெட்டதை எப்படி அறியலாம்?

முதலாவது கேள்விக்கு 20 மனித விழுமியங்கள் சொல்லப் பட்டன? நாம் இதைப் பின்பற்று கிறோமா என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

முன்னைய காலத்தில் மாணவர்கள் ஆசிரியரைப் பின் பற்றினார்கள். ஆசிரியரிடமிருந்தே அறிவுத் திறன், ஒழுக்கம் சகல தையும் கற்றுக் கொண்டார்கள். தற்போதைய மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றுகிறார்களா?

- இலட்சிய நிறைவுள்ள (சீர்மைய, ஆதர்ஷIdeal) ஆசிரியர், இலட்சிய நிறைவுள்ள மாணவரையே விரும்புவார்கள். இரண்டும் சேர்ந்தால் இலட்சிய இனம் உண்டாகும். Ideal Teacher + Ideal Student = Ideal Nation ஆதர்ஷமாணவருக்கு, ஆதர்ஷ ஆசிரியரே தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தான் பின்பற்றுவதையே, மாணவருக்குக் கற்பிக்கும் ஆசிரியரே இலட்சிய நிறைவுள்ள ஆசிரியராவார். பின்பற்றுவதினால் ஏற்பட்ட அனுபவமும் முக்கியம்.
- இலட்சிய நிறைவுள்ள (சீர்மைய) மாணவன் தான் கற்றதை உடனே செயலில் பின்பற்றுவான்.
- நல்ல ஆசிரியருக்கும் சீர்மைய ஆசிரியருக்கும் வித்தியாசம் உண்டு. தான் எப்போதும் செயலில் பின்பற்றுவதையே எப்போதும் கற்பிக்க வேண்டும். கொஞ்சம் குறைந்தால் அதற்கு நல்லது என்ற சொல்லை உபயோகிக்கலாம். அதாவது சீர்மையம் எப்போதும் நல்லதா யிருக்கும். நல்லது எப்போதும் சீர்மையா யிருக்காது. (Ideal vs Good).
- சீர்மையாயில்லாவிட்டால் மதிப்பும் அல்லது குணாதிசயமும் (Value) சீர்மையமாயிராது.
- மனித விழுமியங்கள் (Human Values) என்றால்
- நிலையானதாக இருக்க வேண்டும். (Consistency)
- அளவிடக் கூடியதாக இருக்க வேண்டும். (Measurable)
- திரும்பத் திரும்ப செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். (Repeatable)

**மாணவனின் நம்பிக்கை**

- முதலில் அம்மாவில் தங்கியுள்ளது.
- பின்னர் ஆசிரியரில் தங்கியுள்ளது.
- இறுதியில் தன்னில் தங்கி தன்னம்பிக்கையாகிறது.

மனித விழுமியங்களைப் பற்றிக் கதைப்பது இலகு. ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வருவது இலகுவானதல்ல. எமது வார்த்தைக்குப் பொறுப்பாயிருக்க வேண்டும். எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் இருக்கவேண்டும்.

உ-ம்:- பஜனையில் - எண்ணம் உண்டு.

சொற்கள் உண்டு.

பாடுவது செயல்.

மேலும் தாளம், ராகம், பாவம், இனிமையிருக்க வேண்டும்.

இதில் எது மாறாததாயிருக்கிறது?

சுருதி பஜனைப் பாடல் முடியும் வரை மாறாதது. அதுவே. அதுதான் சத்தியம்.

ஆசிரியர் சகலதையும் அவதானிக்கவேண்டும். மாணவனைப் பற்றி பெற்ற தாய்க்கும் மேலாகத் தெரிய வேண்டும். கற்பிக்கும் வகுப்பில் மாத்திரம் கவனமெடுத்தால் போதாது. எல்லா வகுப்புக்களைப் பற்றியும் கரிசனை இருக்க வேண்டும்.

**பிரேம வாஹினியில் 4$^{th}$ அதிகாரத்தில் குறித்திருப்பதைக் கவனிக்கவும்.**

மனிதன் அதிக காலம் உயிர் வாழ்வதில்லை. ஆனால் இந்தக் குறைந்த வாழ்நாளில், தெய்வீக ஆனந்தத்தை அனுபவிப்பதற்கான திறன் அவனிடம் உள்ளது. இரண்டு மனிதர்கள் மேலோட்டமாகப் பார்த்தால் ஒரே அச்சில் வார்த்தது போலத் தோன்றக் கூடும். அவர்களின் அங்கங்கள் ஒரே மாதிரியாகக் காணப்படலாம். இருந்தபோதும், ஒருவர் தேவதை போல நடந்து கொள்ளலாம். மற்றையவர் மிருகம் போல நடந்து கொள்ளக்கூடும். இதற்குக் காரணம் என்ன? அவர்களது நடத்தையைப் பார்த்தால் இருவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நம்புவது கடினமாக இருக்கும். எனவே **நடத்தையே மனிதனுக்கு பிரதானமாகும்.**

ஒவ்வொரு தருணத்திலும் மனித வாழ்க்கை மிகவும் எளிதானதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவ்வாறல்ல. அதில் ஒரு உள்ளார்ந்த சிறந்த அர்த்தம் ஒன்று உள்ளது. வாழ்க்கை முழுவதும் ஒரு தலைசிறந்த வேள்வியாகும். அதாவது யக்ஞ கர்மா. நாளின் அனைத்து அனுபவங்களையும் ஒரு சரணாகதி உணர்வில் இறைவனுக்கு அர்ப்பணித்த பின், ஒருவர் இன்புற்று அனுபவிக்கும் உறக்கம் சமாதி அன்று வேறென்ன? எங்கும் ஊடுருவி இருக்கும் நான் இந்த உடல் என்ற உணர்வின் காரணமாக மனிதன் பகுத்தறிதலின்றி உடலுக்குப் பல வழிகளில் பௌதீக சுகத்தைச் சேகரிக்கிறான். ஆகவே உடலைப் பற்றி நாளும் இரவும் சிந்திக்காமல், ஏனையவர்களுக்கு திரிகரணசுத்தியுடன் சேவை செய்யத் தரப்பட்டதே இந்த உடலாகும். எண்ணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் இருந்தால் உயர்ந்த நிலையை அடையலாம். நீங்கள் உடலல்ல, ஆத்மாவேயாகும்".

வேலையைப் பிரார்த்தனையாக மாற்றி, பிரார்த்தனை மூலம் ஞானத்தை அடையலாம்.

.............................................

**12.12.2019**

சத்தியத்தின் கீழ் சொல்லப்பட்ட "உண்மையே எப்போதும் சொல்லவேண்டும்" என்ற குணாதிசயத்தை தெரிந்து எடுத்தார். உண்மை என்றால் என்ன?

நடந்ததை நடந்தபடி சொல்லல் (இறந்த காலம்)
நடப்பதை அப்படியே சொல்லல் (நிகழ் காலம்)
நடக்கப் போவதை பற்றிச் சொல்ல முடியாது. அது உண்மை யாகும் என்பது நிச்சயமில்லை.

இதில் சிலரை எழும்பி 30 விநாடிகள் உண்மையைப் பேசச் சொன்னார். அநேகர் உண்மையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். சிலர் பிறந்த திகதி, பெயர் ஆகியவற்றைச் சொன்னார்கள். பெயர் பிறந்து சில நாட்களுக்குப் பின்பு தானே சூட்டப்பட்டதென்பதைச் சுட்டிக் காட்டினார்.

நாம் ஏன் இலட்சிய நிறைவுள்ளவர்களாக வரவேண்டும்? நாம் பிறப்பிலேயே இலட்சிய நிறைவானவர்கள். ஆகவே அதுவாக வரவே விரும்புகின்றோம். பூர்ணம் பூர்ணத்தையே விரும்பும். இது தான் சுயவிருத்தி. (Self development) இதன் படிகள்

அகத் தூண்டுதல் (Inspiration)
திறன் விருத்தி (Skill building)
(உ - ம்: வாசிப்பு, எழுத்து, பேச்சு அறிந்து கொள்ளுதல், அன்போடு ஞாபகம்: திரும்பச் திரும்பச் செயற்படுதல்)

விளக்கமளித்தல் / தகவல்கள்
தன்னம்பிக்கை - ஆர்வம் - முயற்சி - நடைமுறைப்படுத்தல்
முழுமையான உன்னதம்
(All round excellence)

நாம் ஆதர்ஷபுருஷர்களாக வாழ்ந்தால், சமூகமும் திருந்தும். நாம் திருப்தியாகவும், ஆனந்தமாகவும் இருப்போம். இறுதியில் எமது இலக்கை (முக்தி) அடைவோம்.

ஒரு சின்னக் காணொளி மூலம், சுவாமியின் அருளுரையின் ஒரு பகுதியைக் காட்டினார்.

"மானவத்தினுள் எல்லா அறிவும் (Knowledge) இருக்கிறது. அந்த அறிவைத் திறனாக்கினால் (Skilling) சமநிலை (Balance) ஏற்படும். சம நிலையின் பின்பு அகப்பார்வை ஏற்படும். பின்பு ஞான நிலை கிடைக்கும். அகப் பார்வையின்போது சகலவித முன் னேற்றத்தையும் அடையலாம். கற்றலுடன் நிற்காமல் பயிற்சி செய்ய வேண்டும். கடமையைப் பூரணமாக நேர்த்தியாகச் செய்தால் சுவாமி சந்தோஷப்படுவார். சுவாமிக்கு தரம் தான் வேண்டும். எண்ணிககையல்ல என்று வலியுறுத் தியுள்ளார். மானிட வர்க்கத்திற்குப் பயன் அளிக்கும் விதத்தில் அறிவைத் திறனாக்க வேண்டும். மேலும் எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் இருக்கவேண்டும".

**மாணவர்கள் என்ன கற்க விரும்புகிறார்கள்?**

- கற்றல் மகிழ்ச்சிகரமானதாக இருக்கவேண்டும்.
- குழு முயற்சி
- தொழில் நுட்பம் மூலம் கற்றல்
- இலட்சிய நிறைவு மாணவனாக வரவேண்டும் என்பதை நாம் அவதானிப்பு மூலமாகவும், கேள்விகள் கேட்பதன் மூலமாகவும் அடையலாம்.
- கடமை என்றும் மாறாது. (Duty)
- கதாபாத்திரம் மாறிக் கொண்டே யிருக்கும். (Role)

நான் யார் என்ற விசாரணை முக்கியம்.

நான் திரு ஸ்ரீகுமாரா? உடம்பின் பெயர்.

நான் விஞ்ஞான ஆசிரியர் - தொழில்

நான் ஆசிரியர் என்பது கதாபாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகாபிமானத்தில் இருந்தால் (மனம் + உடல்)

கட்டுப்பாடுகள் தண்டனை யாகத்தான் உணரப்படும்.

ஆத்மாபிமானத்தில் இருந்தால் ஒன்றுமே தண்டனையாகத் தெரியாது.

உ+ம்

சுவாமி

ஆன்மீக மகான்கள்

ஏப்ரகாம் லிங்கன்

மகாத்மா காந்தி etc

உண்மையை உறுதியுடன் வலியுறுத்திக் கூற வேண்டும். (Affirmation)

**பெற்றோரின் பங்கு:**

- பெற்றோருக்கும் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பு இருக்கும்.
- அவர்களுக்கும் பிள்ளைகளின் பாடங்களில் அக்கறை இருக்கவேண்டும்.
- அவர்களுக்கு எங்கள் எதிர் பார்ப்புகளையும் சொல்ல வேண்டும். எங்களது நோக்கு, கற்பிக்கும் முறை, வழி காட்டல்கள் பற்றி அவர்கள் ஒத்துக்கொண்டார்களாயின் கையொப்பம் எடுக்கவேண்டும். பிள்ளையை வகுப்புக்கு அனுமதிக்க முன்பே இதைச் செய்யவேண்டும்.
- அவர்கள் பிள்ளைகளின் வயதிற்கேற்றபடி ஆணா, பெண்ணா என்பதையும் வைத்து விளக்கம் கொடுத்து ஒப்பம் வாங்கவேண்டும்.

பொருட்களுக்கு மதிப்பை அளிப்பது நாமேதான். 'good' என்ற சொல்லில் other என்ற ஒரு O வை எடுத்துவிட்டால் god ஆக மாறிவிடும்.

......................

**13.12.2019**

**பாடசாலை ஆசிரியருக்கு மூன்று குறிக்கோள்கள்:-**

(1) சுய விருத்தி (Self development)

தன்னம்பிக்கை

விசுவாசம்

ஏற்றுக்கொள்ளல்

அவசரத்தில் சரியாக விளங்காமல் செயலில் இறங்குவது, கற்றலைத் தடுத்துவிடும்.

நாங்கள் சொற்கள் வெள்ளத்தில் மிதக்கப் பழகி விட்டோம்.

- சுய விருத்திச் சந்தர்ப்பங்கள் (Tools)

சத்திய சாயி நிலையம்

சத்திய சாயி பாடசாலை

அமைதி இருக்கை

பஜன்

தியானம்

கல்வி வட்டம்

ஞான வாஹினி, ராமகதா ரசவாஹினியை படிப்பது

(2) கதாபாத்திர விருத்தி (Role Development)

- கடமை இதில் அடங்கும்

இதைப் பற்றி நாம் கற்கவேண்டும்

கதாபாத்திரம் மாறினாலும் கடமை மாறாது

- தன்னை ஏற்றுக் கொள்ளல்
- சுயகௌரவம், சுய மதிப்பும் இதில் அடங்கும்
- தர்மவாஹினியைப் படிக்கவேண்டும்.

(3) கற்பித்தல் விருத்தி (Teaching Development)

பிள்ளைகளைப் படிக்கவைக்க உந்துதல் கொடுக்க வேண்டும். ஒழுக்கம், நாட்டம், ஆர்வம், இவற்றை வளர்க்க வேண்டும்.

கற்பிப்பதிலும் பார்க்க தானாக கற்கும் திறமைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

அனுபவ மூலமாக கற்றல் கற்பித்தலை நடத்த வேண்டும்.

மற்றையவர்களின் நேரத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்.

YEARS OF SELFLESS LOVE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அனுபவம் ஏற்படுத்த வேண்டும். பின்பு உத்வேகம் அளித்து திறனை விருத்தி செய்ய வேண்டும். இறுதியில் விளக்கம் கொடுக்க வேண்டும்.

பல துறைகளில் பிரபல்யமானவர்களை வகுப்புக்கு அழைத்து மாணவர்களை அவர்களுடன் உரையாட விடலாம்.

பார்வை குறுகினால், சிந்தனையும் குறுகிவிடும்.

**கற்பிக்கும் முறைகள்:**

அடிப்படை முறைகள்:

வாசிப்பு, எழுத்து, புரிந்துகொள்ளுதல் திரும்பத் திரும்பப் படித்தல், ஞாபகத்தில் வைத்தல் ஆகியவையாகும்.

சாயி ஆன்மீகக் கல்வி முறையில் கொடுக்கப்பட்டது:

பிரார்த்தனை
அமைதி இருக்கை

மேற்கோள் - காணொளியும் அடங்கும்.

குழு முயற்சி

குழுப் பாடல்

கதை கூறல்

எதில் விருப்பமோ அதை ஞாபகத்தில் வைத்திருப்போம்.

**அமைதி இருக்கையில்** உடலையும் மனதையும் விழிப்புணர்விலிருந்து விடுவித்தல் நடக்கும்.

மனச்சாட்சி, தெய்வக் குரல் உள்ளுணர்வு ஒருமுகப்படுதல், ஞாபகம் வளரும்.

காயத்ரி மந்திரம் சொல்லும்போது இரண்டாவது முறை சொல்லத் தொடங்கியதும் காயத்ரி மாதா காட்சி தந்தால்


என்ன செய்வீர்கள்?

என்ன கேட்பீர்கள்?

பள்ளிக்கூடக் கலாச்சாரம் தனித்துவம் உள்ளதாக மிளிரவேண்டும்.

ஆதர்ஷஆசிரியர்கள்
ஆதர்ஷமாணவர்கள்
பயன் நிறைந்த பேச்சு
பயன் நிறைந்த தோற்றம்
நடை, உடை, பாவனை.

பாடசாலைப் பணிப்பாளர் திரு. R. வசந்தசேனன் அவர்களின் நன்றியுரையுடன் பயிற்சிப் பட்டறை முடிவடைந்தது.



## தேசிய சேவைத் திட்டம்




**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு சத்சங்க சாராம்சம்

**யாழ். சாயி நிலையத்தில் நடந்ததின் சாராம்சம்**

கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்கள் 11.12.2019 அன்று இளைஞர்களிடம் நிகழ்த்திய கலந்துரையாடலின் சாராம்சம்.

சுவாமியின் போதனைகளை நாளாந்த வாழ்வில் நடை முறைப் படுத்துவதற்குரிய (Practical Implementation) செயற்பாட்டு முறைகளை பற்றி விளக்கவும் என்ற வினாவிற்குப் பதிலளித்தார்.

### இயைவித்தல் Tuning

முதலில் உடல், மனம், புத்தி ஆகிய வற்றை இயைவிக்க (Tuning) வேண்டும்.

உதாரணமாக :- இசையில், சுருதி, தாளம், ராகம், பாவம் ஆகியன முக்கியமானது.

இங்கே, சுருதி பாடல் முழுவதும் மாறாது இருக்கும்.

அது போலவே, மாறாமல் நிலையாக இருப்பது "சத்தியம்". இங்கே சுருதி தெய்வத்தைக் குறிக்கின்றது.

முதலில் இயைவித்தல் (Tuning) முடிந்ததும் அடுத்து இசைக் கருவியை பாட்டுடன் இணைத்து இயக்கும் திறமையைப் பெற பயிற்சி செய்யவேண்டும்.

அறிவைத் திறனாக்க மீண்டும் மீண்டும் பயிற்சி செய்ய வேண்டும். (Have to practice for skilling the knowledge)

**1. மனதை இயைவித்தல்**

மனதை நாமஸ்மரணை மூலம் இயைவிக்கலாம் / ஒழுங்குபடுத்தலாம்.

பின்பு மனதைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும். (Master the Mind)

உங்கள் கடமைகளைச் சரியாக நேர்த்தியாகச் செய்யுங்கள். ஏனைய நேரங்களில் மனதை அலைபாய விடாது இறைவனின் மீது திருப்புங்கள். (Namasankeerthana, Japa ......)

- சுவாமியை பக்தியுடன் உருக்கமாக அன்புடன் அழைத்தால் சுவாமி நிச்சயம் எம்மிடம் வருவார். சுவாமியிடம் பாத நமஸ்காரம் எடுப்பது அவசியமானதாகும்.
- ஏன் அவ்வாறு? பாதங்கள் அத்திவாரத்தை குறிக்கின்றது. இங்கு சத்தியமே அனைத்திற்கும் அத்திவாரமாகும். எனவே, என்றும் நிலையான சத்தியமான சுவாமியின் பாதங்களை முழுமனதாகத் தியானித்து வணங்க வேண்டும்.

**2. உடல் மற்றும் புலன்களை இயைவித்தல்.**

உடல் கட்டுப்பாடு:- உடல் அசைவுகளையும் புலன்களையும் கட்டுப்படுத்த வேண்டும். உடல் அசைவுகள் இல்லாது போனால், எண்ண ஓட்டம் குறைந்து மனம் அமைதி அடையும்.

**எப்போதும் எக்காலத்திற்கும் மாறாத சத்தியத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். உதாரணங்கள்:**

பேச்சு:-

பேச்சில் என்றும் மாறாது இருக்க வேண்டியது எது?

மிகவும் கட்டுப்பாட்டுடன் பேசவேண்டும். நாம் பேசும்போது (எதைப் பேசினாலும்) மென்மையும் softness இனிமையும், sweetness சீரான உறுதியும் steadiness எப்போதும் இருக்க வேண்டும். இதுதான் பேச்சுக் கட்டுப்பாடு.

பார்வை:-

பார்வையில் என்றும் மாறாது இருக்கவேண்டியது எது?

மற்றவர்கள் துன்பப்படும்போது கரிசனையான பார்வை வேண்டும். துன்பப்படுபவர்களுக்கு உடன் உதவும் கனிவான பார்வை வேண்டும்.

கை, கால்கள்:-

என்றும் மாறாது இருக்கவேண்டியது எது?

செய்யும் செயலில் அன்பு வெளிப்படுவதே சேவை ஆகும். உதவி தேவைப்படுவர்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

Service is done by God: to God and for God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்யும் சேவைப் பணிகள் மக்களுக்கு உண்மையில் மனமகிழ்ச்சியை தரவல்லவைகளாக இருத்தல் வேண்டும். சமூக சேவை புரிவதாகக் கூறி ஒரு மருத்துவ மனையில் போய் நோயாளியைப் பார்த்து வருவது என்பது உண்மையான சேவையாகாது. நாம் யாருக்கு சேவை புரிய வேண்டும் என எண்ணுகிறோமோ அவர்களை இறைவனின் உருவமாக நாம் கருத வேண்டும். சமுதாயத்தில் உதாசீனப் பட்டவர்களையும் அணுகி நாம் உதவி புரிவது இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும்.

"ஏனையோரின் துன்பம் எனது துன்பம்" என்ற மனப்பாங்கு வேண்டும். உன் உடலில் ஒரு கையில் காயம் ஏற்பட்டால் மற்றக் கை உடனே போய் உதவி செய்கிறது. அதுபோலவே, பிரபஞ்ச உடலில் அங்கங்களாகிய நாம் மற்றோருக்குத் துன்பம் நேரும் போது உடனே உதவ வேண்டும். எல்லா நாமமும், ரூபமும் பகவானுடையவையே. கடவுளின் உடம்பின் ஒரு பகுதியே இயற்கையாகும். அதில் நாம் ஒரு சிறு துளி.

எனவே, சரியான நேரத்தில் சரியானவர்களுக்குச் சென்றடையும் வண்ணம் பயனுடைய சேவையை ஆற்றவேண்டும்.

**கேட்டல்:-**

கேட்டலில் என்றும் மாறாது இருக்கவேண்டியது எது?

தேவையற்ற குறை கூறும் வம்புப் பேச்சுக்களைச் செவிமடுக்கக்கூடாது. (Avoid Gossiping)

தீயவர்களுடனான சகவாசத்தை தவிருங்கள். (Avoid Bad Company)

### 3. புத்தி (Intellect):

புத்தியை இயைவிக்க பகுத்தறிவும் (Discrimination) பற்றற்ற தன்மையும் (Detachment) வேண்டும்.

எச் செயலினைச் செய்ய முன்பும் சிறிது நேரம் ஆராய்ந்து சிந்திக்கப் பழகவேண்டும். இவ்வாறு சிந்தித்துச் செயற்பட்டால் கோபத்தையும் கட்டுப்படுத்தலாம்.

தன்னலமில்லாததே பற்றற்ற தன்மை ஆகும்.

பற்றை அகற்றுவது எவ்வாறு?

இதை சுவாமி பல தடவைகள் தன் வாழ்வில் வலியுறுத்திக் காட்டியுள்ளார்.

ஒருமுறை, புட்டபர்த்தியில் உள்ளக விளையாட்டரங்கு கட்டிய பொழுது, சுவாமி ஒவ்வொரு நாளும் அங்கு சென்று சகல கட்டுமானப் பணிகளையும் மிக அக்கறையுடன் மேற்பார்வையிட்டார். பின்பு அவ் அரங்கு கட்டி முடித்து திறக்கப்பட்ட பின்பு சுவாமி மீண்டும் அங்கு சென்று பார்வையிடவில்லை.

இதேபோலவே, பற்றை 100% வைத்தால் அதுவே 100% பற்றை அறுக்கவும் காரணமாகவும் இருக்கும். Total involvement; Instant detachment. பற்றை முழுமையாக வைத்து ஈடுபாட்டுடன் பணியை முடிக்க வேண்டும். பணி முடிந்ததும் அதனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது கணப் பொழுதில் பற்றிலிருந்து விடுபடல் வேண்டும்.

**சவால்களுக்கு முகங்கொடுத்தல் (Face the Challenges.)**

எம் வாழ்வில் ஏற்படும் சவால்கள் எல்லாம் எமது நன்மைக்கே. என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். All that happens is only for my good alone. (இதினாமஞ்சிகோசமே)

சவால்களை எதிர்க்க வேண்டாம். அவற்றிற்கு முகங்கொடுங்கள். manava, means Not New.

மானவத்தினுள் எல்லா அறிவும் (Knowledge) இருக்கின்றது. அறிவை திறனாக்கினால் **(Skill)** சமநிலை (Balance) வரும் அறிவை அழித்தால் (Kill) சமநிலை குழம்பிவிடும்.

சமநிலை உறுதியாகினால் உள் பார்வை / அகப்பார்வை வரும். வெளிப்பார்வை தெரியாது. உள் பார்வையின் உதவியுடன் சகலவித முன்னேற்றத்தையும் அடையலாம். இதனால் தன்னம்பிக்கை மேலோங்கும். வெறும் கற்றலுடன் நிற்காமல் அதை உடனடியாக பயிற்சி செய்யவேண்டும். உனது கடமையை சரியாக நேர்த்தியாகச் செய்தால் அது சுவாமிக்கு சந்தோஷம் கொடுக்கும். "எனக்கு தரம் மட்டுமே வேண்டும். அளவு வேண்டாம்."

Every person has immense



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

knowledge within him. You will lose your balance if you kill this knowledge by misusing it. But when you use Knowledge with skill balance will be achieved, Once balance is established INSIGHT would be achieved. With the help of this insight you should achieve progress. We should not merely learn; we should put into practice what we learn.

**Swami stands for practical science, not platform speeches, you need not to do a lot, but at least practice one teaching, when you practice even one sincerely, you will be redeemed.**

Sathya Sai speaks Vol 14:10 pp 45

Do Deeds follow word, Develop Faith, Dedicate all one's action to GOD. Whatever you put into practice, that will become part of you.

### நேரப் பயன்பாடு

### Time Utilisation

நேரத்தை மாற்றமுடியாது, முகாமைத்துவம் செய்ய முடியாது. ஆனால் நேரத்தை வினைத்திறனாக எவ்வாறு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதை எமக்கேற்றவாறு நாமே திட்டமிட்டுக் கொள்ளலாம்.

நாங்கள் செய்ய வேண்டியவற்றை மிகவும் அவசியம் எது? உடனே செய்ய வேண்டியது எது? என்று முன்னுரிமை கொடுத்து திட்டமிட்டு செய்து முடிக்கவேண்டும்.

வாழ்வில் உண்மையான JOY மகிழ்ச்சி என்பது,

J- Jesus First முதலாவது, கடவுள்
O - Others Second - இரண்டாவது மற்றையோர்
Y You Last - இறுதியாக உனது தேவை என முன்னுரிமை கொடுத்து செயற்படல்.

(தொகுப்பு செல்வி பிருந்தினி மகேஸ்வரன்.)

.................................................

**12.12.2019 ஆம் ஆண்டு பருத்தித்துறை சாயி நிலையத்தில் நிகழ்ந்த சத்சங்கம்**

நிலையத் தலைவர் திரு. A. ஜெகநாதன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட பின்பு கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்கள் சத்சங்கத்தை ஆரம்பித்தார்.

- அவர் குறையொன்றுமில்லை என்ற பாடலுடன் ஆரம்பித்தார். சிலரின் குடும்பம் எவ்வளவு சாந்தமாக மகிழ்ச்சியுடன் இருப்பதை நினைவூட்டினார். சிவனை வேண்டினால் எல்லாக் கடவுள்களும் மகிழ்ச்சியடைவார்கள். சிவனிடம் இலேசாக வரம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.

யார். பெரிய பக்தர்? என்று கேட்டுவிட்டு பின்வரும் பஜன் பாடல்களைப் பாடினார்.

- அரோஹரா முருகா அரஹரோகரா ....
- சாயி மாதா, பிதா, தீன பந்து சகா..................
- குருதேவா பிரிய தேவா சாயி தேவா ...............
- தேவி பவானி மா, சத்திய சாயி பவானி மா .........
- சிவ மகேஸ்வரா, சிவ மகேஸ்வரா சிவ மகாதேவா .........

பின்பு, பஜனைப் பாடல்கள் பாடுவதற்கு பயிற்சி மிகவும் முக்கியம். எல்லோரும் ஒரே குரலில், ஒரே சுருதியில் பாடினால் சக்தி பலக்கும். சுருதிதான் முக்கியம்.

பக்தி, ஞானம், கர்ம என்ற மார்க்கங்களை விளக்குவதற்காக கதை கூறினார்.

எப்படி எஜமானை சந்திக்கலாம்? வாசலில் பயங்கரமான நாய் நிற்கின்றது.

- நாயை அன்பினால் அழைத்து ஏதாவது சிற்றுண்டியைப் போடலாம். - இது கர்ம மார்க்கம்.
- எஜமானை உரக்கக் கூப்பிட்டு அவரின் கவனத்தை ஈர்த்தால் அவரே வந்து கூட்டிச் செல்வார். - இது பக்தி மார்க்கம்.
- எஜமானை திரிகரண சுத்தியுடன் வேண்டினால் நாய்க்கு வித்தியாசம் தெரியாமல் அமைதியாக இருக்கும் - இதுதான் ஞான மார்க்கம்.

என்று கூறி மங்கல ஆராத்தியுடன் சத் சங்கம் நிறைவு பெற்றது.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம், 15 ஆம் திகதிகளில் வவுனியாவில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட குருமார்களுக்கான பயிற்சியின் தொகுப்பு.**

சத்திய சாயி சர்வதேச நிறுவனம், ஸ்ரீலங்கா, தேசியத் தலைவர் திரு.வி.மனோகரன் கலாநிதி ஸ்ரீநிவாஸ் ராகவன் அவர்களை அறிமுகம் செய்தார்.

தலைவர்:- காலம் மாறுகின்றது. நாமும் அதற்கேற்றவாறு மாறவேண்டும் என்று கூறி தற்போதைய பிள்ளைகள் கேள்வி கேட்பார்கள். அதற்குத் தகுந்த பதிலளிக்க எமக்குத் தெரியவேண்டுமென்றும் கூறினார். பின்பு பயிற்சிக் கலந்துரையாடல் தொடங்கியது.

தற்போது பாலவிகாஷ் என்ற பதம் இந்தியாவிலும் நேபாளம் நாட்டிலுமே உபயோகப்படுத்தப்படுகின்றது. ஏனைய வேறு நாடுகளில் சாயி ஆன்மீகக் கல்வி (Sai Spiritual Education) என்ற பதமே உபயோகிக்கப்படுகின்றது. இதை சுவாமி அனுமதித்துள்ளார்.

இந்நாட்டுக் குழந்தைகளின் முன்னேற்றம் எல்லோரினதும் பொறுப்பாகும். அதாவது ஆசிரியர், பெற்றோர், சமூகம், மாணவன் எல்லோரினதும் கூட்டுப்பொறுப்பாகும்.

கலாநிதி ராகவன் அவர்கள் "கேட்பதைக் கொடுப்பார்" என்ற பாடலை கிற்றார் (Guitar) தட்டிப் பாடினார். இதற்குப் பின் என்ன என்று கேட்டார். சுவாமி ஏதாவது தேவையென்றால் தன்னிடம் மட்டுமே கேட்கச் சொன்னதையும் கூறினார்.

பின்வரும் கூற்று திரையில் போடப்பட்டது.

"என்னிடம் முழுமையாகச் சரணடைந்தவர்களுக்கு வழிகாட்டுவேன். நீங்கள் எதிர்பார்த்த வழியிலிருந்து வேறுவிதமான வழியில் கூட்டிச் செல்லும்பொழுது நான் உங்களை என் கைகளில் ஏந்திச் செல்வேன்"

- சத்திய சாயி பாபா

சக்தி - பக்தி - புத்தி - முக்தி

கடவுள் மீது பக்தி வைத்து. புத்தியைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுகோள் போட்டு, முக்தி நிலையை அடையலாம்.

பிரார்த்தனையில் கடவுளிடம் நாம் வேண்டுதல் போடுவோம். இதில் வேறொருவருக்காகப் பிரார்த்தித்தால் அவருக்கு நடந்ததுதான் அனுபவம். முழு நேரத்தையும் பயன்படுத்தவேண்டும். பாதிப் பிரார்த்தனை பாதிப் பயனையே தரும்.

**செயற் பயிற்சி 1**

எங்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் இரண்டாகப் பிரிந்து, ஒரு பகுதி மற்றப் பகுதியினர் யார் யாருக்காக என்ன கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்யவேண்டுமென ஒரு அட்டை தயாரித்து, எல்லோரும் சேர்ந்து பிரார்த்தனை ஒன்றைச் செய்யவேண்டும். பின்பு நாம் பிரார்த்தனை செய்தவர்கள் இடத்திற்கு விஜயம் செய்து அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை அறியவேண்டும்.

நாம் எப்போதும் எமது கடமைகளைப் பரிபூரணமாகச் செய்யவேண்டும். இதில் எமது எண்ணம், சொல், செயல் இசைவாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டும். இதை அன்புடன் செய்வதே தர்மமாகும். ஏதாவது கஷ்டங்கள், எழுந்தால் கடவுளிடம் கேட்க வேண்டும். உ+ம்:- மருத்துவ சேவையின்போது குறிக்கப்பட்ட மருந்து பற்றாமல் போய்விட்டால் என்ன செய்வீர்கள்? நாங்கள் கடவுளிடம் பிரார்த்தித்து அரைவாசி மருந்தைக் கொடுத்து மிகுதிக்கு சுவாமியின் விபூதியைக் கொடுக்கலாம். அன்புடன் நாளைக் கழித்தால் அதுவே எம்மைப் பாதுகாக்கும்.

இன்னுமொரு நிகழ்வு

ஒரு ஐஸ் (Ice) தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளி வேலை முடிந்து எல்லோரும் போகத் தொடங்கிவிட்டார்கள். ஏதோ வேலை காரணமாக குளிரூட்டப்பட்ட மண்டபத்திலிருந்து வெளியே வர முந்தி கதவு மூடப்பட்டு விட்டது. உள்ளே யாருமில்லை. உள்ளே கடும் குளிர். கடவுளைப் பிரார்த்திவிட்டு இருந்தபொழுது அங்கு வேலை செய்யும் பாதுகாப்புக் காவலர் திடீரென கதவைத் திறந்தார். என்ன அதிசயம்? ஏன் பாதுகாவலர் போய்க் கதவைத் திறந்தார். இந்தத் தொழிலாளி தொழிற்சாலைக்குள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போகும் பொழுதும் வெளியேறும் பொழுதும் காவலாளிக்கு வாழ்த்துக் கூறிச் செல்வது வழக்கம். அன்று காலை வாழ்த்துக் கூறியவர் பின்னேரம் வாழ்த்துக்கூறவில்லையே என உணர்ந்த காவலாளி அவரைத் தேடிப் பார்க்க முனைந்தார். அப் போது தான் ஐஸ் மண்டபத்தின் கதவையும் திறந்து பார்த்த பொழுது தொழிலாளி அகப்பட்டிருந்ததை உணர்ந்தார். வழக்கமாக நாம் அன்பைப் பரிமாறினால் அது எங்க ளைக் காக்கும்.

**பூரண சரணாகதி என்றால் என்ன?**

"சரணாகதியைச் சாப்பிடவேண்டும்" என்ற ஒரு மரபுமொழியைக் (Idiom) கூறி எங்களைச் சிந்திக்கச் சொன்னார்.

திரௌபதை துகிலுரியப்படும்போது எவ்வாறு சரணாகதியடைந்தார் என்பதையும் சொன்னார்.

பாடவிதானம் என்று கூறுகிறோம். அதற்குச் சில முன்யோசனைகளை வைத்தார்.

- சுவாமியின் வாக்கொன்றை எடுத்துக்கொள்ளவேண்டும். அது சத்தியமேயாகும். அதை அளவிடமுடியாது.
- அந்த வாக்கைப் பின்பற்றி அனுபவமாக்கவேண்டும்.
- அந்த அனுபவத்தை பிள்ளை களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.
- கூட்டுப் பொறுப்பை செயற் படுத்த வேண்டும். (பிள்ளைகள் + குரு + பெற்றோர் + நிறுவன நிர்வாகிகள்).
- எண்ணம், சொல், செயலில் இசைவும் தூய்மையும் இருக்கவேண்டும்.
- கடமையைச் செவ்வனே பூரணமாகச் செய்யவேண்டும்.

நடைமுறையிலிருக்கும் பாடவிதானம் மிகவும் பளுவாக இருக்கிறது. உதாரணமாக பகவத் கீதையில் 700 சுலோகங்கள் உள்ளன. அதில் 25 பாட விதானத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. நாங்கள் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஒரு சுலோகத்தை அதன் கருத்தைத் தெரிந்து, பின்பற்றி ஏற்படும் அனுபவத்தை பிள்ளைகளுடன் பகிரவேண்டும். நாம் எப்போதும் சுவாமியுடன் இணைப்பை ஏற்படுத்த வேண்டும். சுவாமியின் கூற்று திரையில் போடப்பட்டது.

"சுவாமி செயல்முறை அறிவையே மேடைப் பேச்சுக்களிலும் மேலாக விரும்புகிறார். நீங்கள் பெரிதாக ஒன்றும் செய்யத் தேவையில்லை ஒரு போதனையையாவது முழுமையாகப் பின்பற்றவும். ஒன்றையென்றாலும் இதய பூர்வமாகப் பின்பற்றினால் நீங்கள் மீட்கப்படுவீர்கள்".

- சத்தியசாயி அருளமுதம் Vol 14 அ.10 27.07.2002

சொன்னது செயலில் பரிணமிக்கவேண்டும். குருமாரே பாட விதானத்தை நிர்ணயிக்க வேண்டும். பாடவிதானத்தைப் பற்றி யோசிக்கும்பொழுது

- தேசிய மட்டத்திற்கு முன்னுரிமை முதலிலும், பின்பு
- பிராந்திய மட்டத்திற்கும் அதற்குப் பின்பு
- சாயி நிறுவன நிலையத்திற்கு முன்னுரிமை கொடுக்கலாம்.

எங்களுக்குத் தேசிய மட்டத்தில் எண்ணம், சொல், செயலில் இசைவும் தூய்மையும் இருப்பதையே ஏற்றுக்கொண்டுள்ளோம். இதை யொட்டியே ஏனைய மட்டங்களில் செயற்படவேண்டும்.

அறிவு - திறனாக்கம் - சமநிலை - அகப்பார்வை - முக்தி

இதற்காக பகவானின் அருளுரையிலிருந்து சிறு பகுதியை குறும் காணொளியாகக் காட்டப்பட்டது.

"ஒவ்வொருவருள்ளும் அளவிட முடியாத அறிவு உண்டு. இந்த அறிவைத் திறனாக்கவேண்டும். அறிவைத் துஷ்பிரயோகம் செய்தால் அழிவு ஏற்பட்டு சமநிலை குழம்பிவிடும். ஆனால் சரியான நன்மையான முறையில் அறிவைத் திறனாக்கினால் சமநிலை ஏற்படும். இதனால் அகப்பார்வை ஏற்படும். அகப்பார்வையினால் முன்னேற்றம் அடையலாம். நாங்கள் படித்தால் மட்டும்போதாது, படித்ததைப் பின்பற்றவேண்டும். அறிவை மேலும் மேலும் பின்பற்றினால் அதிக மகிழ்ச்சியை சுவாமிக்குக் கொடுக்கும். இதனால் எனக்கு ஒரு பயனும் இல்லை. நான் எதுவுமே செய்யத்தேவையில்லை".

கடமையைச் செவ்வனே பூரணமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் அது என்னை மகிழ்விற்கும்.

எனக்கு எண்ணிக்கையல்ல தரமே முக்கியம்

(ரேடியோ சாய் அங்குரார்ப்பண நிகழ்வின் போது (ஆகஸ்ட் 2002) சுவாமி மாணவர்களுடன் சம்பாஷித்தது.)

தரம் மேலோங்கினால் அளவு அல்லது எண்ணிக்கை மேலோங்கும். தரத்தில் (quality) முக்கியமானது எண்ணம், சொல், செயலில் இசைவும் தூய்மையும் ஏற்படுவதேயாகும். இவ்வாறு செயற்பட்டால் தெய்வ பிரீதி, பாப பீதி, சங்கநீதி ஏற்படும்.

இலட்சிய நிறைவுள்ள / ஆதர்ஷபுருஷர்களாக (Ideal) ஆசிரியரும் மாணவனும் மிளிரவேண்டும். இலட்சிய நிறைவுள்ள ஆசிரியர், தான் பின்பற்றுவதையே தான் அனுபவித்ததையே கற்பிப்பார். இலட்சிய நிறைவுள்ள மாணவன் தான் கற்றதை உடனடியாகப் பின்பற்றுவான். இம் மாணவனுக்கு இலட்சிய நிறைவுள்ள ஆசிரியர் தேவை.

(Ideal Teacher + Ideal Student = Ideal Nation)

பாடசாலை அல்லது வகுப்பாசிரியரின் மதிப்பு அறிக்கையை வாசிக்கும் பொழுது பாடங்களில் எவ்வளவு புள்ளிகள் (Marks) எடுத்துள்ளான் என்பதைப் பார்க்கிலும் ஆசிரியர் எழுதிய கவனக் குறிப்புரைக்கே (Remarks) முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

சுவாமியின் அருளுரையிலிருந்து ஒரு பகுதி திரையில் போடப்பட்டது.

**ஆசிரியரிலும் மேலாக குருவாகப் பரிணமிக்கவேண்டும்.**

"ஆசிரியர் பிள்ளைகளின் அதி உன்னத தன்மைகள் மிளிருவதற்கு உத்வேகம் கொடுக்கவேண்டும். மாணவனின் ஒவ்வொரு அடிவைத்தலையும் உன்னிப்பாகக் கவனிப்பது குருவின் கடப்பாடாகும். மாணவன் பிழையான மாதிரி செயற்பட்டால், கெட்ட செயல்களில் ஈடுபட்டால், ஆபத்தான சந்தேகம் மனதில் எழுந்தால் எல்லாவற்றையும் திருத்தி வழிநடத்தவேண்டும். கமக்காரன் எப்படித் தனது வயலில் புல் பூண்டுகள் வளர விடாது விழிப்புடன் செயற்படுகிறானோ, அப்படியே பிள்ளைகளின் சோம்பல், தளர்வுகள் என்ற களைகளை ஆசிரியர் அகற்றவேண்டும்.

இந்த உயரிய கடமைக்கு, ஆசிரியர் என்ற பதம் பொருத்தமில்லை. ஆசிரியர் தகவல் பரிமாறலையும் சில திறன்களை வளர்ப்பதிலுமே அக்கறையாயிருப்பார். ஆகவே இனிமேல் ஆசிரியர் என்ற பதத்தை விட்டு மிகவும் பொருத்தமான குரு என்ற பதத்தையே உபயோகிக்கவேண்டும். குரு என்பவர் ஒரு ஆன்மீகப் பொறுப்பையே ஏற்றுள்ளார் என்பதை மனதில் சதா வைத்துக் கொள்ள வேண்டும். குருமாரின் உள்ளொளியிலிருந்து இளம் இதயங்கள் அன்பையும், ஒளி யையும் பெறவேண்டும். நீங்கள் தர்மம், சாந்தி, பிரேமை என்ற பண்புகளைப் பின்பற்றி, பிள்ளைகளிலும் அவரது வீட்டிலுள்ளவர்களிலும் இப் பண்புகள் மிளிர உத்வேகம் அளிக்க வேண்டும்".

- சத்தியசாயி அருளமுதம்: Vol- 12 (3.1.1974) (Beyond Teacher Be a Guru)

**கற்பித்தலைப் பற்றி சுவாமியின் கூற்று**

"பிள்ளைகள் குருவிடமிருந்தே பழக்கங்கள், நடத்தைகள், நம்பிக் கைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். ஆகவே குருமார் இலட்சிய நிறைவானவர்களாகவும் முன்னுதாரணமானவர்களாகவும் மிளிர வேண்டும். அவர்கள் பணிவு, எளிமை, ஒழுக்கம், நம்பகத்தன்மை, நேர்த்தி ஆகிய பண்புகளில் உன்ன தமாக மிளிர்ந்தால், கற்பிக்கும் கல்வி யும் உன்னதமானதாக இருக்கும்.

- சத்திய சாயி ஆன்மீகக் கல்வி ஆசிரியர்களுக்கான கையேடு

சுவாமியின் இன்னொரு அருளுரை யிலிருந்து எடுத்துக் கூறப்பட்டது.

**நம்பிக்கையுடன் பின்பற்றல்:**

"முதலில் நம்பிக்கை விருத்தி யடைய வேண்டும். அரக்கனும் கடவுளை வணங்குபவன் என்றாலும் அவனின் செயல்கள் அரக்கச் செயல் களாகவே இருக்கும். கடவுளில் நம்பிக்கை வைத்து, செயல்கள் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப் பணித்தால் மட்டுமே சாந்தி கிடைக்கும். எத்தனை சமய நூல் களைப் படித்தாலும் அதில் பிரசங் கங்கள் செய்தாலும் பிரயோசன மில்லை. எதை வாழ்க்கையில் பின் பற்றி அதுவாக மாறுவதே பிரதான மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது எண்ணம், சொல், செயல் ஒன்றாகும் பொழுதுதான் அது சத்தியமாக மாறும். வெறுமனே எண்ணங்களையும் தகவல்களையும் பிரசங்கம் செய்வது வெறும் மேடைப் பேச்சாகும். இது பொய்மையான தேயாகும். இப்படியான ஒருவர் முழுமையான உன்னதமானவராக முடியாது. சிவராஜ்பட்டேல் சத்தியத்தைக் கடைப்பிடித்து, புத்தமாக வெளியிட்டுள்ளார். இப்புத்தகம் அவருக்குப் புகழும், பெரும் மனத் திருப்தியையும் அளித்துள்ளது.

குருமார் கற்பித்ததை, மாணவர் வாழ்க்கையில் பின் பற்றுவதையே நான் எதிர்பார்க்கிறேன். குருவுக்கும் மாணவனுக் குமிடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அப்படியான தொடர்பு நேர்மறை எதிர்மறை ஒன்றாகச் சேர்ந்ததும் மின்சாரம் பாய்வதைப் போலாகும்.

-சத்திய சாயி அருளமுதம் Vol. 14

தேனீர் இடைவேளைக்குப் பின்பு பஜனை பாடினார். பஜனையில் தாளம், சுருதி, ராகம், பாவம் இருக்க வேண்டும். பஜனைப் பாடலில் தொடங்கி முடியும் வரை எது மாறாது இருக்கும் என்று கேள்வி கேட்கப் பட்டது. சுருதிதான் மாறாதது. இது தான் சத்தியம்.

பஜனையின் போது கை தட்டல் மிகவும் பயனுள்ளது. மனக் கட்டுப்பாட்டுடன், தீய கர்மவினை, தீய எண்ணங்களையும் கலைத்து விடும். சிலர் மிகவும் சத்தத்துடன் கை தட்டுவார்கள். ஒருமுறை பஜனை பாடும் பொழுது ஒரு மாணவன் பலமாகக் கைதட்டிப் பாடினார். சுவாமி அவருக்குச் செய்தி அனுப்பினார், "உன் கை தட்டல் உனது தோளில் இருக்கும் காகங்களைக் கலைத்தால் போதும், மற்றவர்களின் தோளில் இருக்கும் காகங்களைக் கலைக்க முற்படாதே" என்று ஹாஷ்யமாகச் சொல்லி அனுப்பினார்.

**ஆன்மீக உறவு**

இறைவனை மகிழ்வூட்டுதல்

↓

இறைவன் என்னை மகிழ்வூட்டுதல்

↓

தெய்வீக வாழ்க்கை - எண்ணம், சொல், செயல்
இசைவும் தூய்மையும்

↓

இறைவனின் கருவி
(செய்விப்பவர் அவனே)

↓

அத்வைதம் உ+ம்- அனுமான்

நாம் பயிற்சி செய்யும்போது மிகவும் அவதானமாகவும், அதே எண்ணமாகவும் இருக்கவேண்டும்.

உ+ம் :கதை கூறினார்.

கலபகோஸ் (Galapagos) தீவில் ஆமைகள், பறவைகள் சிநேகிதமாக இருந்தன. ஒரு ஆமை ஒரு கழுகுடன் மிகவும் சிநேகிதமாக இருந்தது. ஆமைக்குத் தன் நண்பன் போல பறக்க வேண்டுமென ஆசை கிளம்பியது. நண்பனைக் கெஞ்சிக் கேட்டது. நண்பனும் "சரி பறக்க வேண்டுமனால், நாமிருவர் ஒரு தடி தருவோம். அதை வாயால் கவ்விப் பிடித்தபடியே பறக்கப் பழகுவோம். இரண்டு கழுகுகள் ஒன்று சேர்ந்தன. இப்படியே தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டார்கள். ஒருநாள் உயரப் பறக்கும் பொழுது தானாகப் பறக்க ஆமைக்கு ஆசை எழும்பியது. அது உடனே வாயைத் திறக்க, கடலில் வீழ்ந்து விட்டது. வீழ்ந்ததும் அது நீந்திப் போய்விட்டது.

பயிற்சி தொடர்ச்சியாக இருக்கவேண்டும். இடையில் வாயைத் திறந்ததால் ஆமை கடலில் விழ்ந்து விட்டது.

அறிவு - திறனாக்குதல் - இறைவனுடன் தொடர்பு கொள்ளல்

↑

பயிற்சி + பயிற்சி

கடமையைச் செவ்வனே செய்தல் → இறைவனை மகிழ்வித்தல்

மாதா, பிதா, குரு எல்லோரையும் தெய்வமாக மதித்தல் → இறைவனுடன் வாழ்தல்

இறைவனுக்காக நேரம் உபயோகித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் முன்னேறும் போது தடைகள் ஏற்படும்

உ+ம்- கதை:-

ஒரு எஜமானனைச் சந்திக்கப் போகின்றீர்கள். அவருடைய வீட்டு வாசலில் பயங்கரமான பெரிய நாயொன்று இருக்கின்றது. அது உள்ளே போகவிடாது. எப்படி எசமானரைச் சந்திக்கலாம்?

- நாயை வசப்படுத்தலாம். அதாவது அதற்கு அன்புடன் உணவு ஏதேனும் கொடுத்து தடவலாம்.
- உரக்கக் கத்தலாம். எஜமானின் காதில் கேட்டால் அவரே வந்து கூட்டிச் செல்லலாம்.
- எஜமானனைப் போல் மாறினால் நாய்க்கு வித்தியாசம் தெரியாது. அது கடிக்காமல் போகவிட்டுவிடும். உ+ம்- பரதனும் இராமனும். இராமர் 14 வருடங்களுக்குப் பின் அயோத்திக்கு வரும்போது பரதன் அவரை வரவேற்று அவருடன் தேரில் வந்தான். இராமரையே சதா நினைத்தபடி இருந்ததால் அவரைப் போல உருவமும் வந்துவிட்டது.

அறிவு - திறனாக்கல் - சமநிலை - தொடர்பு

இதை சதா பயிற்சி செய்யவும்.

பிள்ளைகள் இறைவனுடன் தொடர்பு கொள்ளச் சில செயற்பாடுகள்:

- பிள்ளைகளை (அநாதை) இல்லங்களுக்குக் கூட்டிச் செல்லல்.
- வேறு சுற்றுலாக்கல், ஆனால் பாடசாலை நேரத்தில் போகக்கூடாது.
- பெற்றோர்களில் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

சாயி ஆன்மீகக் கல்வியின் செயற்பாடுகள் அனைத்திற்கும் சத்திய சாயி தேசிய சபையே பொறுப்பு.

சாயி மனித மேம்பாட்டுக் கல்வியை பொது மக்களிடம் எடுத்துச் செல்லுதல் (நிறுவனங்கள், பாடசாலைகள், சத்திய சாயி பாடசாலை) சத்திய சாயி கல்வி நிறுவனத்தின் பொறுப்பாகும். இரு நிர்வாகமும் ஒன்றிற்கு ஒன்று உதவி செய்யலாம்.

பிள்ளைகளுக்கு ஒவ்வொன்றையும் சொல்லி, விளக்கம் கொடுத்து அதை அனுபவமாக்கவேண்டும். சொல்லமுன்பு அதைப் பற்றிய விளக்கம் அனுபவம் இருக்கவேண்டும்.

உதாரணமாக: பிரார்த்தனை என்றால் என்ன?

கடவுளுடன் பேசுதல்.

காயத்ரி மந்திரம் - கருத்து, நன்மை, அனுபவம் மூன்று முறை சொல்ல ஆயத்தமான போது இரண்டாவது முறையில் காயத்ரி மாதா காட்சி கொடுத்தால் என்ன செய்வீர்கள்? ஏன் மூன்று முறை சொல்ல வேண்டும்.

கடவுளிடம் என்ன கேட்க வேண்டுமென்று குழந்தைகள் உடனடியாக கேட்பார்கள். வயது வந்தவர்கள் தடதடப்பார்கள்.

பிள்ளைகள் கேட்டதைச் சொல்லும்.

பிள்ளைகள் கண்டதைச் செய்யும்.

எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கும்.

சொற்களுக்கு வலிமையிருந்தாலும் செயல் அதனிலும் மேலாகச் சொல்லும்.

ஒரு குணாதிசயத்தை உதாரணமாக எடுத்தார்.

"உண்மையையே எப்போதும் பேச வேண்டும்"

இதைப் பற்றி 30 வினாடிகள். உண்மை பேசும்படி சிலரைக் கேட்டார். 30 வினாடிக்குப் பேச சிரமப் பட்டோம். பலர் உண்மையைப் பற்றிச் பேசவா கேட்கப்பட்டதென குழம்பினார்கள்.

நாமெல்லாம் சமுத்திரத்தின் அலைகளேயாவோம். எங்களது உடம்பு வித்தியாசமாக இருந்தாலும் ஆத்மா ஒன்றே.


நீர் இருக்கும் பாத்திரங்கள் வேறானாலும் நீர் ஒன்றே.
சகலதும் பிரபஞ்ச விழிப்புணர்வே.
எல்லாம் ஒன்றே.

<u>வீட்டு வேலை தரப்பட்டது.</u>

ஆறு மாதங்களுக்குள் இப்புதிய சிந்தனையின் படி இரண்டு பாடங்கள் தயாரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சகோதரி கமலாதேவி கேசகபொடி (கல்வி இணைப்பாளர், கிழக்கு மாகாணம்) **தொகுப்புரையின் போது கூறியது.**

- பாடங்கள் புகட்டப்பட்டன.
- எப்படி குரவாக இருக்க வேண்டும்
- எப்படி மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.
- பிரார்த்தனையில் எண்ணம், சொல், செயலில் ஒருமை தூய்மை உணரப்பட வேண்டும்.
- கூட்டுப் பொறுப்பு
- ஆன்மீக உறவு
- குருவே பாடவிதானம், கற்பிக்கும் முறை, பாடத்தயாரிப்பு.
- பயிற்சிக்கு முக்கியத்துவம்
- பூரண சரணாகதி ( அலையும், சமுத்திரம் போல )
- விளங்குவதற்குப் பயிற்சி வேண்டும்
- இவற்றை அனுபவமாக்கி மாணவர்களுக்கும் அனுபவமாக்க வேண்டும்

தொடர்ந்து திருமதி வாசுகி சஞ்ஜீவன், டாக்டர். ஏ.ஜெகநாதன் முடிவுரை வழங்கினார்கள்.


மங்கலாராத்தியுடன் பயிற்சி முகாம் நிறைவடைந்தது.

ஜெய் சாயிராம்

தொகுப்பு: திருமதி சுதர்சினி சத்யரூபன்
(கல்வி இணைப்பாளர், வடமாகாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி ஆன்மீகக் கல்விக்கான சர்வதேச கட்டமைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் சேர்க்கை

"தெளிவான மனச் சாட்சியுடைய மாணவ மாணவிகளை வளர்ப்பதே இக் கல்வியின் நோக்கமாகும். பாடவிதானம் முக்கியமல்ல. உயர் இலட்சியங்கள், பழக்கங்கள், வளர்ந்து மிளிரும் ஒரு சூழலை உருவாக்குவதே முக்கியம். குருவின் தாக்கம் வலிவுடையதாக இருந்தால்தான் பிள்ளைகளில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும் உந்துதல் கருவியாக இருக்கமுடியும்."

- சத்தியசாயி அருளமுதம், Vol-14: 06.06.1978

உங்களுக்கு இரண்டு வகையான பிள்ளைகளுண்டு. உங்களின் உடலிலிருந்து வந்தவை காமபுத்திரர் என்றும் சாயி ஆன்மீக் கல்வியிலுள்ள பிள்ளைகள் பிரேம புத்திரரென்றும் முன்னவர் காமத்தின் விளைவு, பின்னவர் அன்பினால் கவரப்பட்டவர்கள் என்றும் சுவாமி கூறியுள்ளார்.

எப்போதும் கொடுத்துப் புண்ணியம் பெறுவீர்கள் இறுகப் பிடித்தால் இழந்துவிடுவீர்கள்.

பிள்ளைகளை சமூக சேவைக்காக கிழமையில் ஒரு தடவையாவது அழைத்துச் செல்லவேண்டும்.

இச் சேவையை யக்ஞம் என்று கருதவேண்டும்.

சகலதையும் இப்பிள்ளைகளுக்காகத் தியாகம் செய்யவேண்டும். தூய்மையான இதயம் உள்ள இப்பிள்ளைகள் உங்கள் வழிகாட்டல்களிலேயே தங்கியுள்ளார்கள்.

பிள்ளைகள் எங்கே தவறுகிறார்களென மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அவர்களின் தாய்மார் பிழைகளைக் கவனிக்க மாட்டார்கள். பிழைகளை மென்மையான இனிமையான ஊட்டல் மூலம் திருத்தவேண்டும்.

கையிலே பிரம்புக்குப் பதிலாக இனிப்பை வைத்திருங்கள். அன்புக்கு எவ்வளவோ பொறுமையுண்டு.

ஆன்மீகக் கல்வி வகுப்புக்கள் கிழமையில் ஒரு தடவையே நடப்பதால், வகுப்பின் தாக்கம் வலுவாக இருக்கவேண்டும்.

பிள்ளைகளின் பெற்றோரை மாதம் ஒருமுறை சந்திக்கவேண்டும். அவர்களுக்கும்; பிள்ளைகள் பெற்றோரையே காப்பி அடிப்பார்கள். கேட்டதைச் சொல்வார்கள். பார்த்ததைச் செய்வார்கள். சாத்வீக உணவே பிள்ளைகளுக்கு உசிதம் என்று சொல்லவும். பிள்ளைகளுக்கு முன்னால் மனத் தளர்ச்சி, வெறுப்பு, விரக்தி ஆகியவை வெளிப்படக்கூடாது. மனச் சாட்சியே குருவென்று செயற்பட வேண்டும். வேறு மதத்துப் பிள்ளைகளோ அல்லது கணவன்மாரோ தடங்கலாக இருக்கலாம்.

பிள்ளைகள் மாத்திரமல்ல, குருமாரும் எவ்வளவையோ படிப்பார்கள். சுவாமியே ஆதிகுரு என்பதை முழுமையாக உணரவேண்டும். சர்வ மதக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

ஏனைய மதங்களைப் பற்றி சொல்லவேண்டும். எவ்வாறு பிரார்த்தனை செய்கிறார்களெனத் தெரியவேண்டும். ஏனைய மதக் குருமார்கள் அல்லது மகான்களின் வாழ்க்கையை சொல்லிக்கொடுக்கலாம்.

வேதங்கள் - கடவுள் எமக்குத் தந்தவையெல்லாவற்றிற்கும் நன்றி சொல்லவேண்டும் என்கின்றன.

விவிலியநூல்- அமைதியையும் கொடையையும் குறிக்கின்றது.

புத்த தர்மம் - புலனடக்கம், பற்றில்லாத் தன்மையை வலியுறுத்துகின்றது.

குருமார் ஆன்மீக சாதனைகள் கிரமமாகச் செய்யவேண்டும்.

ஓங்காரம் 21 தடவை
5 ஞானேந்திரம்
5 கர்மேந்திரியம்
5 பிராணங்கள்
5 கோஷங்கள்
1 மனம்

சாந்தி, உடல், உளம், ஆத்மா, என்ற மூன்றிற்குமாக மூன்று முறை சொல்ல வேண்டும்.

- சத்திய சாயி அருளமுதம் பாகம் 14- 06.06.1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை எப்படித் திறனாக்குதல்?

உலக அறிவு வெளிப்புற அறிவு. ஆனால் மனித விழுமியங்களோ அக அறிவு. மழுங்கிப் போயுள்ள கல்வியை மனித விழுமியக் கல்வி மூலமே கூர்மையாக்க முடியும். உலக அறிவினால் குழப்பப்பட்ட சம நிலையை மனித விழுமியத் திறன்களால்தான் சமநிலையை திரும்ப ஏற்படுத்தமுடியும். திறனென்றால் நைபுண்ணிய சக்தியையே (Keenness of mind) பகவான் குறிப்பிடுகின்றார். திறனாக்கத்தை ஆய்வு, பரிசோதனை, விசாரணை, விளக்கம் ஆகியனவற்றால்தான் விருத்தி செய்யமுடியும்.

உதாரணமாக சூரியனிலுள்ளே நிகழ்வதை ஆராய்ந்ததால்தான், விஞ்ஞானிகள் அணுகுண்டைத் தயாரித்தார்கள். ஆகவேதான் அறிவைத் திறனாக்குதல் மூலம் சமநிலையை உண்டாக்கவேண்டும். ஆராய்ச்சி மானிட நலனையே நோக்கமாகக் கொள்ளவேண்டும். நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து விளங்கி சமநிலைப்படுத்தவேண்டும். சமநிலை குழம்பினால் புற அறிவிலேயே செயற்பட்டால் அகப்பார்வை மறைந்துவிடும்.

நீங்கள் மனதை ஒருமுகப்படுத்த முடியாவிட்டால் தியானம் செய்யமுடியாது. தியானத்தில் மனதை ஒருமுகப்படுத்துவதுதான் திறன். கல்வியின் சாரம் மன ஒருமுகப்படுத்தலேயாகும். ஞானமே மன ஒருமித்தலின் நோக்கம். பலன்களைத் தியாகம் செய்தால் இறுதி நோக்கை அடையலாம். இதற்குத் தொடர்ச்சியான பயிற்சி அல்லது அப்பியாசம் வேண்டும்.

நடைமுறைக் கல்வி சடப்பொருள், இதைச் சக்தியாக மாற்றுவதே திறனாக்கலாகும்.

நாம் எப்போதும் எமது தாய் நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும். உங்களிலிருக்கும் எதிர்மறை 'I' (நான்) என்னிலுள்ள நேர்மறை நானுடன் (I) இணையவேண்டும்.

எங்களிலுள்ள அறிவு, திறன், ஆற்றல் சகலதையும் எமது நாட்டின் மேன்மைக்காக உபயோகித்து நாட்டின் நல்ல பெயரை நிலைநாட்டவேண்டும். (அருளுரை 29.09.2000)

நாம் நடைமுறையிலிருக்கும் இலேசான பாதையில் பயணிக்கவே விரும்புவோம். ஒரு வீரன், வீராங்கனையாக இருக்கவேண்டுமாகில், உனது தனித்துவத்தைப் பலப்படுத்தி, உனது இலட்சியங்களைப் பின்பற்று. (அருளுரை- 30.07.1978)

குரு என்ற பதவி, சுவாமியால் தரப்பட்ட மிகவும் உன்னதமான ஆசீர்வாதம். சுவாமியிலும், உங்களிலும் இக்கல்வி முறையிலும் தளராத நம்பிக்கை இருக்கவேண்டும் குருமார் மிகவும் எளிமையான முறையில் சிறிய இலேசான விழுமியங்களைப் பிள்ளைகள் பின்பற்ற உங்களின் முன் உதாரண மூலம் வழிகாட்ட வேண்டும்.

குருமாருக்கு எல்லோருக்கும் மேலான சத்குரு வழிகாட்டுகிறார் என்பதைக் கணப்பொழுதும் மறக்கவேண்டாம்.

குருமார் தங்களுக்குள் பொறாமை ஆகியவற்றால் முரண் பாட்டடையக் கூடாது. மற்றையோரில் குறை காணுவதையும் அகற்ற வேண்டும். இருவர் தொடர்ச்சியாக முரண்பாடு கொண்டால், ஒரு விசாரணையுமின்றிப் பதவியிலிருந்து நீக்கி விடவும்.

அளவில்லா அன்பையும் கருணை யையும் வெளிப்படுத்த வேண்டும்.

- அருளுரை: 27.11.1979

குருமார்களுக்கு பிள்ளை களுக்குக் கற்பிக்கும் முறைகளைப் பற்றி பயிற்சி அவசரமாகவும் பிரதான மாகவும் கொடுக்க வேண்டும் என நினைக்கிறேன்.

- அருளுரை: 03.01.1974

"எல்லாவற்றிற்கும் மேலாக சாயி ஆன்மீகக் கல்வியைப் பரப்பி, பிள்ளைகளைக் காப்பாற்றி இந்தியக் கலாசாரத்தின் ஒளிவிளக்குகளாக மிளிர வைக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஆன்மீக நிலையத்தை உருவாக்க வேண்டும்".

**சாயி ஆன்மீகக் கல்வியை பற்றிய வரலாற்றுச் சுருக்கம்**

1969 - பாலவிகார் என்ற பெயரில் தொடங்கியது

1971- பாலவிகாஸ் என்று அழைக் கப்பட்டது.

1980 - மனித மேம்பாட்டுக் கல்வி ஆரம்பமாகியது. அகப் பார்வை, தன்னையறிதல்,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனித விழுமியங்களை வெளிப்படுத்தல், மனித விழுமியங்களைப் பின்பற்றல்:

எடுகெயா் என்ற பெயா் கொடுக்கப்பட்டது.( அதுவாக இரு - அதைச் செய், அதை அவதானித்து பின்பு அதை விட சொல்லல்)

- ஆசைக்கு வரம்பு கூறப் பட்டது.

1970 - U.K , 1977 -U.S.A இல் ஆரம்பித்தது.

1995 ஆறாவது உலக மாநாடு. ஆன்மீகக் கல்வி என்ற பெயரை சுவாமி சூட்டினாா்.

1987 முதலாவது சாயி சா்வதேச கல்வி நிறுவனம். ISSE - டென்மாா்க்கிலும்,

மும்பையில் 1990 இலும்

2006 சத்திய சாயி உலக நிறுவனம்

**இந்தக் கல்வித் திட்டத்தின் தனித்துவம்:**

- இது ஆசிரியரை மையமாகக் கொண்டது. அவா் தாயாக, தண்ணீா் தாங்கியாக, விவசாயியாக, தேகாப்பியாச ஆசிரியராக, பானை வனவனாக, சிற்பியாக, இலட்சிய நிறையுள்ளவராகவும் செயற்பட வேண்டும்.

- அமைதி இருக்கை

புலனடக்கம், மன அடக்கம், ஆகியவை அடங்கும்

- அனுபவமூலமாகக் கற்றல்

ஜெய் சாயிராம்.

## இரண்டு வகை நான்: பற்றுள்ளதும் பற்றற்றதும்

நான் இரண்டு வகைப்படும் ஒன்று உடலோடு சேர்த்து அடையாளம் காண்பது. மற்றது உடலைப் பிரித்துக் காண்பது. இரண்டுமே நான்தான். உடலோடு சேர்த்துப் பார்க்கும் நான் அகங்காரம் ஆகி விடுகிறது. எங்கே போனாலும் ஆணவம் ஒரு வடிவத்தைக் கொண்டு செல்கிறது. உருவமில்லாத, உடலோடு சேரா நான் என்பது ஆத்மா. உருவமற்ற ஆத்மாவுக்கு குணமும் இல்லை. உருவத்தோடு சேரும் போது அதற்கு குணங்கள் வந்து விடுகின்றன. இன்றைய மனிதர்கள் உடலுடன் சேர்ந்திருக்கும் நான் என்பதையே உணர்கிறார்கள். உடல் இல்லாத நான் என்பதை அவர்களால் சிந்திக்கவே முடியாது, ஆனால், உடலையே அடிப்படையாகக் கொண்டாலும் மனதை உள் முகமாகத் திருப்பினால் உரிய காலத்தில் ஆத்மானுபவம் கிடைக்கும் இதை ஆத்ம சாஷாத்காரம் (ஆத்மாவை நேரடியாக உணர்தல்) என்று அழைப்பார்கள். இது நான் என்பதை அது உற்பத்தியாகும் இடத்துக்கே பின் தொடர்ந்து சென்று பிடிப்பதாகும். இது. சூரிய வெளிச்சத்துக்கு எதிர்ப்புறமாகச் செல்பவன் தன் நிழலையே பின்தொடர்வான். எதிர்த்திசையில் திரும்பினால்தான் அவனால் நிழலைப் பின்புறத்தில் விடமுடியும். கடவுளை உணருவதிலும் இதே செயல்பாடுதான் நடக்கிறது. வெளிப்புற உலகுக்கு எதிராக உள்நோக்கிப் பயணிக்க வேண்டும்.

புறத்தே இருக்கும் இயற்கை உலகின் மீதான நமது கவனத்தை உள்ளே இருக்கும் தெய்வீகத்தை நோக்கித் திருப்புவதே இன்றைய தேவை. நீங்கள் செய்யவேண்டிய சாதனை இதுவே. இவ்வாறாக, இயற்கையை ஒரு பௌதீக நிகழ்வாகப் பார்ப்பதற்கு பதிலாக எல்லாவற்றிலும் தெய்வீகத்தைப் பார்க்கிறீர்கள். வெளியுலகை தெய்வீகத்தின் உருவெளிப்பாடாகப் பார்க்கும்போது இயற்கையின் நிகழ்வுத் தோற்றத்தைப் பார்க்கமாட்டீர்கள். இயற்கையை இறைவனின் சொருபமாகப் பாருங்கள்.

சத்தியசாயி அருளமுதம் - Vol-30

தொகுப்பு : டாக்டர் R. சிவசங்கர்.

ஜெய் சாயிராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# "கொடைக்குக் கர்ணன்"

அளவிலா தியாக மனப்பாங்குகொண்ட கர்ணன், தீயவர்களுடன் சேர்ந்து, தனது பெயருக்குக் களங்கம் விளைவித்துவிட்டான்.

மகாபாரதப் போர் 17ஆம் நாள், கர்ணனின் வீழ்ச்சியுடன் முடிவிற்கு வந்தது. பாண்டவர்கள் வெற்றியைக் கொண்டாடும்பொழுது, கிருஷ்ண பரமாத்மா துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

அர்ஜுனன் கிருஷ்ணரை அணுகி, போர் வெற்றியில் முடிந்துள்ள நேரத்தில் ஏன் கவலை? என்று கேட்டார். கிருஷ்ணர் "மகாபாரதம் ஒரு பெரிய கொடை வள்ளலாகிய வீரனை இழந்து விட்டது. அவர் பாரத தேசத்திற்கு நற்பெயரும் புகழும் எடுத்துக்கொடுத்த வீரன். இப்படியான ஒருவனை இழந்ததினால் கவலை கொள்கின்றேன்" என்றார்.

இதைக்கேட்ட அர்ஜுனன் அதிசயித்து, "கிருஷ்ணா! எங்களின் வெற்றிக்காக தேரோட்டியாக செயற்பட்டாய். வெற்றிக்காக மகிழ்ச்சியடையாமல் ஒரு எதிரியின் வீழ்ச்சிக்காக கவலைப்படுகின்றாயே" என்று கேட்டான். அதற்கு கிருஷ்ணர் "தியாகத்திற்கு கர்ணனைவிட வேறு யாருமில்லை. வெற்றி, தோல்வி, துன்பம் எல்லாச் சமயங்களிலும் தியாகம் செய்யப் பின்னிற்கமாட்டான். உன்னிடம் அப்படியான மனப்பாங்கு இருக்கிறதா? இல்லவே இல்லை" என்று சொல்லி அர்ஜுனனை கர்ணன் வீழ்ந்து கிடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். இருண்டு விட்டபடியால், கர்ணா! கர்ணா! என்றழைத்தார். கர்ணன் மூச்சுவிடக் கஷ்டப்பட்டாலும் யார் அழைப்பது? நான் இங்கே என்று சொன்னான். கிருஷ்ணர் வயது முதிர்ந்த பிராமண வடிவம் எடுத்து அணுகினார். கிருஷ்ணர் (பிராமணனாக) "நீ ஒரு பெரிய கொடையாளி எனக் கேள்விப்பட்டு இப்படியான நிலையிலிருப்பாய் என்று நான் நினைக்கவில்லை". "எதுவானாலும் ஒரு சிறு கொடை தரவேண்டும்". கேளுங்கள் என்று கர்ணன் சொல்லத் "தனக்கு சிறிதளவு தங்கம் தேவை" என்று பிராமணன் சொன்னான். "என் செய்வது, என் மனைவியிடம் போய்க் கேளுங்கள். வேண்டியளவு பொன் தருவாள்" என்று சொன்னான். "இது என்ன? ஒரு சிறு தொகை தங்கத்திற்காக என்னை ஹஸ்தினாபுரத்திற்கு போகச்சொல்கிறாயா? நான் கேட்பதைத் தரமுடியாவிட்டால் நான் போய்விடுகிறேன்" என்று சொல்லக் கர்ணன் கல்லை எடுத்து தனது பற்களை உடைத்து அதிலிருக்கும் தங்கத்தை எடுத்துக் கொள்ளுமாறு வேண்டினான். பிராமணன், "சே! இரத்தம் படிந்த பொன்னை என்னால் தொட முடியாது" என்று சொல்ல, கர்ண்ன் ஓர் அம்பை மேலேவிட மழை பொழிந்தது அதில் பற்களைக் கழுவித் தானம் செய்தான். உடனே கிருஷ்ணர் தனது சுயரூபத்தைக் காட்டினார். "யார் நீங்கள்" என்று கர்ணன் கேட்க "நான் தான் கிருஷ்ணன். உனது தியாகத் தன்மையை மிகவும் மெச்சுகிறேன். என்ன வேண்டும்" என்று கிருஷ்ணர் கேட்டார். "கிருஷ்ணா இந்த கடைசித் தருவாயில் எனக்குக் காட்சி தந்தீரே அதுவே எனக்குப் போதுமென்று" கர்ணன் சொல்லி, "எனது இதயத்தை உமது பாதங்களில் சமர்ப்பிக் கின்றேன் ஏற்றுக் கொள்ளும்படி பிரார்த்தித்தான்".



கர்ணனைப் போல கொடையாளியாக இருக்கவேண்டும். இப்படி மேன்மையான பாரதக் கலாச்சாரத்தை உறுதிப்படுத்தும் இதிகாசங்களை பாரத மக்கள் படிப்பதில்லை. மகாபாரதக் கதையில் கர்ணன் செய்ததைப் படித்த இந்தோனேஷிய அரசன் தனது மகனுக்கு சுகார்னோ எனப் பெயர் வைத்தார். அவர் இந்தோனே ஷியாவின் தலைவரானார்.

பகவானின் அருளுரை 19.01.1997

ஜெய் சாய்ராம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ஆவது அனுவாகம் - ருத்ர சமகம்



ருத்ர சமகத்தின் 11 ஆவது அனுவாகத்தில் ஒற்றைப்படை எண்கள் 1 முதல் 33 வரையிலும் இரட்டைப் படை எண்கள் 4 இன் வர்க்கமாக 4 முதல் 48 வரையிலும் வருகின்றன. இந்த எண்களை வழங்குமாறு சிவனை வேண்டி அமைந்தது இந்த சமகம். இது ஒரு கருத்து. சமகத்தின் 10 ஆவது அனுவாகத்தில் உடல், உளம், ஆத்மா எல்லாவற்றையும் தியாகம் செய்து ஆசைகள் அற்ற நிலையில் அகம் பிம்மாஸ்மி என்ற அனுபூதியிலுள்ளார்.

11ஆவது அனுவாகத்தில் ஏகசமே என்று தொடங்குவது நான்தான் ஒன்று, நான்தான் எல்லாம், எண்களால் குறிக்கப்படுபவை எல்லாம் நான்தான் என்பதைக் குறிக்கின்றதென்றும் விளங்கிக் கொள்ளலாம்.

இந்த ஒற்றைப்படை எண்கள் எதைக் குறிக்கின்றன?

**1.** இயற்கை: பிரம்மம்

**3.** முக்குணங்கள், 3 லோகங்கள்

**5.** பஞ்ச மகா பூதங்கள்: பஞ்ச பிராணன்கள்

**7.** 5 புலன்கள் + மனம் + புத்தி- 7 அதிர்வு நிலைகள், 7 சப்த ரிஷிகள்.

**9.** 9 துவாரங்கள் கொண்ட உடல், நவவித பக்தி, நவக்கிரகங்கள், நவ இரத்தினங்கள்.

**11.** பத்து பிராணன்கள் + சுழுமுனை
அமாவாசையின் பின் 11 ஆவது நாள் (சந்திர நாட்குறிப்பு)
5 கர்மேந்திரியங்கள் +5 ஞானேந்திரியங்கள் + மனம்.

**13.** பதின்மூன்று தேவர்கள்.
பதின்மூன்று உயிர் எழுத்துக்கள் (Vowel Sounds in Sanskrit)

**15** உடலிலுள்ள நாடிகள்: சந்திர கலண்டரின்படி 15 நாட்கள் (காலம்)

**17** மனித உடலுறுப்புகள், இறந்த உடலிலும் உள்ளன. இலிங்க சரீரத்தின் 17 அங்கங்கள்.

**19** விழிப்பு நிலையிலும், கனவு நிலையிலும் அனுபவிக்கும் 19 முகங்கள். (5 கர்மேந்திரியங்கள் + 5 ஞானேந்திரியங்கள் 5 தன்மாத்திரைகள் + மனம் + அகங்காரம் + சித்தம் + புத்தி = 19)

**21** 21 யாகங்கள். (7 பகா, 7 ஹவிஸ், 7 சோம) இத்தோடு சேர்ந்த 5 கர்மேந்திரியங்கள் + 5 ஞானேந்திரியங்கள் +5 தன்மாத்திரைகள் + 5 பிராணன்கள் + அகங்காரம்.

**23.** ஜீவன் முக்தி நிலை உடலோடு சேர்ந்த 25 இல் அகங்காரத்தையும், மனதையும் அகற்றிய நிலை. இது 23 சோடி குறோமசோம் (Chromosomes) என்பதையும் குறிக்கும்.

**25** மனித உடலின் கூறுகள்.
ஆகாயம் பஞ்சகம் 5 (ஞாற்ற + மனம் + புத்தி + சித்தம் + அகங்காரம்)
வாயு பஞ்சகம் 5 (5 பிராணன்)
அக்கினி பஞ்சகம் (5 ஞானேந்திரியம்)
ஜல பஞ்சகம் 5 (5 தன் மாத்திரைகள்)
பூமி பஞ்சகம் 5 (5 கர்மேந்திரியங்கள்)

**27.** நட்சத்திரங்கள் (அஸ்வினி, பரணி, கார்த்திகை etc.

**29.** 25 கூறுகள் +4 வாசனாக்கள் (P.V. Ch 11)
பூமி எலும்பு, தோல், தசை, நாளம், மயிர்.
நீர் - இரத்தம், சலம், உமிழ்நீர், சளி, மூளை.
அக்கினி பசி, தாகம், சோம்பல், சிநேகம்
வாயு செயல், அசைவு, வேகம், வெட்கம், பயம்.
ஆகாயம் - காமம், கோபம், பேராசை, பெருமிதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொறாமை.
வாசனைகள் - உடல், மனம், சொத்து, பாலுணர்வு
31. உலகங்கள். (சஞ்சரிக்கும் நிலைகள்)
33. தேவர்கள் (வாதவர் 8+ ருத்திரர் 11 + ஆதித்தியர் 12+ அஸ்வின் + பிரஜாபதி)

**இரட்டைப் படை எண்கள் எதைக் குறிக்கின்றன?**

4- . 4 புருஷார்த்தங்கள் (தர்ம, ஆர்த்த, காம, மோக்ஷம்)
. 4 வேதங்கள்
. 4 ஆச்சாரங்கள் (பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வனப் பிரஸ்தம், சந்நியாசம்)
8 - . 4 வேதங்கள் +4 உப வேதங்கள்,
. 8 திசைகள்
. 8 சித்திகள்
12 - 6 வேதாங்கங்கள் +6 சாஸ்திரங்கள்
. 12 ஆதித்தியர்கள்
. 12 மாதங்கள்
. 12 வீடுகள் (ஜாதகத்தில்)
16 16 கலாஸ் (பூரண அவதாரிடமுள்ளது)
சந்திரனுக்கும் உண்டு.
சித்திகள் (16)

20- மஹா பூதங்கள் (ஸ்தூலம் +சூக்குமம்)

24- உணர்வு நிலையற்ற உடலின் கூறுகள்.
காயத்ரி அளவையில் உள்ள எழுத்துக்கள்.
28- 28 அவதாரங்கள் - வேதவியாசர் போன்ற

32- அடிப்படை வித்தியாக்கள்.
+4 வேதம், உபவேதம் etc
36- தந்திரங்கள்

40- சிவப்புக் குதிரைகள் இந்திரனின் 29 ல் குறிக்கப்பட்ட 29ம், 11 ருத்திரங்களும். மூளைக்கு பலத்த அதிர்ச்சியிலிருந்து விடுபட 40 நாட்கள் எடுக்கும். மரணத் தொடக்கையும் 40 நாட்கள் கையாள வேண்டும்.

44 நானே எல்லாம்
48 நானே சக்தி மயம்

வேத வியாசர் வேதங்களைப் பற்றிப் படித்தது கிருஷ்ண பகவானின் காலத்தில் (3237 to 3102BC) என்று கூறப்பட்டுள்ளது. எண்களைப் பற்றிய அறிவு அக்காலத்திலும் மிக வளர்ந்துள்ளது.


ஆதாரம்:- ருத்திர தத்வம்- மௌனிஸ் வியாஸ், பகவானால் அங்கீகரிக்கப்பட்டது (2010) (Rudra Tatwa)

ஜெய்சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஷிய ஞானி வூல்வ் மெசிங் (Wolfe Messing)



தெய்வீகம் இலேசில் விளங்க முடியாதது. அது மர்மம் வாய்ந்தது. 22.11.1980 அன்று பூர்ணசந்திர அரங்கில் ஆற்றிய அருளுரையின் போது. வூல்வ் மெசிங் என்ற ருஷ்ய ஞானியைப் பற்றி சுவாமி கூறினார்.

சுவாமி சிறு பிள்ளையாயிருந்த பொழுது அவரின் தெய்வீகத்தை உணர்ந்தவர்கள் சிலரே யாவர். அவரின் பேரனார் கொண்டமராஜு, கர்ணம் சுப்பம்மா, மெக்பூப்கான் (உரவ கொண்டா ஆசிரியர்) ஆஞ்ச நேயர் ஆகியோரேயாவர். இதில் வூல்வ் மெசிங்கும் அடங்குவார்.

"1937ஆம் ஆண்டு சுவாமிக்கு 11 வயது. தனது சகாக்களுடன் கமலாபுரம் புகையிர நிலையத்தில் விளையாடி பஜனை பாடிக் கொண்டி ருந்தார். அப்போது 'அந் நிலையத் தில் ஒரு வெள்ளையன் ஓடி வந்து சுவாமியைத் தூக்கி, கண்ணீர் மல்க என்னை முத்தமிட்டு, ஆங்கிலத்தில் ஆனந்தம்! ஆனந்தம்! உங்களை நேசிக்கிறேன், நேசிக்கிறேன்' என்று கத்தினார். என்னுடைய சகாக்கள் என்னை இழுத்துக்கொண்டு ஒரு சகாவின் வீட்டிற்குள்ளே வைத்துக் கொண்டார் கள். அவர் என்னைப் பார்க்கத்தான் வந்தார். அவர் ஒரு கெடுதியும் செய்யமாட்டாரென என்று சகாக்களுக்குச் சொன்னேன். மூன்று நாட்கள் அந்த வீட்டையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு புறப்படும் பொழுது வீட்டுக் கதவில் "இவ்வீட்டில் வசிப்பவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். அவர்கள் தெய்வீகக் குழந்தையை வைத்து சேவை புரிகிறார்கள். நான் அவ்வளவு பாக்கியசாலியில்லை" என்று எழுதிவிட்டுச் சென்றார். இவரின் வாழ்க்கையைப் பற்றி மேலும் குறிப்பிட்டார்.

1917ஆம் ஆண்டு ஸ்ராலின் என்ற சர்வாதிகாரி ருஷ்ய நாட்டை ஆண்டான். அவனுக்கு உலகாயுதம் மீதே நம்பிக்கை. கடவுளிலோ, ஆத்மாவிலோ நம்பிக்கையில்லை. அப்போதுதான் வூல்வ் மெசிங் ஞானி அங்கே தென்பட்டார். அவர் ஸ்ராலினிடம் ஆத்மாவைப் பற்றி விளக்கினார். அங்கே பல அற்புதங்கள் நிகழ்த்தினார். ஸ்ராலினால் இவரைத் தடுக்கமுடியவில்லை. இவரை ஜேர்மனியை ஆண்ட ஹிட்லரிடம் அனுப்பினார். அவர் ஜேர்மனிக்குப் போன பொழுது, வியன்னாவில் அல்பேற் ஐன்ஸ்ரைன், மனோதத்துவத்தின் தந்தை சிக்மண்ட் வுறோயிட் ஆகியோரைச் சந்தித்துள்ளார்.

அவர் இந்தியாவுக்கு ஆத்ம ஞானம் பெறுவதற்காக பல தடவைகள் வந்துள்ளார். பல ஆன்மீக இடங்களுக்கு விஜயம் செய்து, சாதனைகள் செய்து ஆத்ம ஞானம் பெற்றார். அவர் ஸ்ராலினின் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று கூறியுள்ளார். அவர் கூறியபடியே குருஷேவ் ஆட்சிக்கு வந்து சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவர் கிரிஸ் (Kiris) என்பவருடன் சேர்ந்து கிரிலியன் படம் எடுக்கும் கருவியைக் கண்டுபிடித்தார். இக் கருவியை பேராசிரியர் பறோன்வஸ்கி (Baronowsky) பிரசாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்கு கொண்டு வந்து சுவாமியின் முன்னிலையில் உரைகள் நிகழ்த்தியுள்ளார். இக்கருவி மூலம் உயிரினங் களைச் சுற்றியுள்ள மின்காந்த அலைகளைப் (Aura) படம் எடுக்கலாம்.

31.08.2002 அன்று அளித்த அருளுரையில் பின்வருமாறு கூறினார். "சிறுபிள்ளையிருந்தபோது அவரின் நடத்தை விசித்திரமாக இருந்தது. கண்களுக்குத் தெரியாத ஆவிகளுடன் கதைப்பார். சிரிப்பார். ஒருநாள் ஒரு உயரமான வெள்ளை ஆடை அணிந்த முதியவர் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றார். அவர் மெசிங்கை கூப்பிட்டு, "உனது பெற்றோர் உன்னை மனநோயாளர் விடுதிக்கு அனுப்பப் போகிறார்கள். உலக மாயையில் சிக்குண்டு கிடப்பவருக்கு உனது ஆன்மீக எழுச்சியைத் தெரியாது. நீ பாடசாலைக்குப் போகத் தேவையில்லை. இதைச் சொல்லவே நான் வந்தேன்" என்று கூறினார். அப்போது மெசிங் தாத்தா "எங்கிருந்து வந்தீரகள்?" எனக் கேட்க "நான் எங்கிருந்து வந்தேனோ அங்கே போகின்றேன். நான் சொன்னதை மறக்க வேண்டாம். கண்டவர்களுடன் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம்" என்று சொல்லி உடனே மறைந்து விட்டார். 09.02.1909 அன்று சில நாணயங்களை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார். பல இடங்களுக்குச் சென்றார். அவருக்கு மற்றையவர்களின் எண்ணங்களை அறியக்கூடிய ஆற்றலும், தனது எண்ணங்களை மற்றையவர் மனதில் பதிக்கும் ஆற்றலும் இருந்தது. என்னை கமலாபுரம் புகையிரத நிலையத்தில் சந்தித்து, 20 வருடங்களுக்குப் பின்பு திரும்பவும் தேடி வந்தார். கமலா புரத்தில் விசாரித்த பின்பு பங்களூரில் வைற்பீல்ட்டிற்கு வந்தார். அங்கே அப்போது அதிபராக இருந்தவரைச் சந்தித்து என்னைப் பார்க்க அழைத்துக்கொண்டு போகும்படி கேட்டார். அவரிடம் **"உங்களுக்கு அவரின் உண்மையான நிலை தெரியவில்லை.** அவரின் வெளித் தோற்றத்தில் மயங்கியுள்ளீர்கள். அவரைச் சுற்றியுள்ள ஒளி அலைகளை அவதானித்தால் அவரின் உண்மையான நிலை தெரியவரும்" என்று சொன்னார்.

வைற்பீட்டில் 10 நாட்கள் தங்கியிருந்தார். அவருக்கு ஆத்ம ஞானம் புகட்டினேன். அவர் ஒரு நூலை எழுதி டாக்டர் கோகாக் (Dr. V. Gokak) கிடம் கொடுத்து விட்டுப் போய்விட்டார். பின்பு ஒருநாள் நானும் அதிபரும் அறையிலிருந்தபொழுது திடீரென வந்தார். வந்து எனது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டு மறைந்து விட்டார். தெய்வீகத்தின் மகிமையை அறிய முடியாது.

(Google Search) கூக்கிளில் தேடியபொழுது பின்வரும் தகவல்கள் கிடைத்தன.

10.09.1899 அன்று போலந்து நாட்டில் பிறந்தார். தாயார் இவரின் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். இவர் மனநோயால் பாதிக்கப் பட்டுள்ளாரென்றே பலரும் நினைத் தார்கள். இவரின் மனோ சக்தியைத் தெரிந்தவர்கள் வியந்தார்கள். ஸ்ராலின் (Stalin) எவ்வளவோ பாதுகாப்புள்ள வீட்டில் இருந்தபோது இவர் திடீரென முன்தோன்றி சம்பாஷித்து மறைவார். அவரை ஹிட்லரைச் சந்திக்க அறிமுகக் கடிதம் கொடுத்தார். அங்கே ஹிட்லரிடம் கிழக்கே படை யெடுத்தால் அழிந்து விடுவாய் என்று தீர்க்க தரிசனமாகச் சொல்லி மறைந்தார். அவரைப் பிடித்து மறியலில் போட எங்கும் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தியாவிற்கு பலமுறை சென்று மகாத்மா காந்தி, பகவான் சத்திய சாயி பாபா இன்னும் பல ஞானிகளைச் சந்தித்துள்ளார். 08.11.1974 அன்று சமாதியடைந்தார்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு:- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "யாதும் ஊரே யாவரும் கேளிர் ..." எனத் தொடங்கும் பாடல்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"தீதும் நன்றும் பிறர் தரவாரா"
"நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"
"சாதலும் புதுவது அன்றே"
"வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே"
"முனிவின்இன்னாது என்றலும் இலமே"
"மின்னோரு வானம் தண்துளி தலைஇ ஆனாது"
"கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று"
"நீரவழிப் படூஉ‌ம் புனைபோல் ஆருயிர்"
"முறைவழிப் படூஉம் என்பது
"திறவோர்காட்சியின் தெளிந்தனம்"
"ஆதலின் மாட்சியின்"
"பெரியோரை வியத்தலும் இலமே"
"சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

-கணியன் பூங்குன்றனார்
பாடலின் வரிகளும் பொருளும்

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

எல்லா ஊரும் எனது ஊர். எல்லா மக்களும் எனக்கு உறவினர் என்று நினைத்து அன்பே வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு நமக்கு எவ்வளவு இனிமையானதும் சுகமானதுமாகும்.

**"தீதும் நன்றும் பிறர் தரவாரா"**

தீமையும் நன்மையும் அடுத்தவரால் வருவதில்லை எனும் உண்மையை உணர்ந்தால், சக மனிதர்களிடம் விருப்பு, வெறுப்பு இல்லா ஒரு சமநிலை சார்ந்த வாழ்வு கிட்டும்.

**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"**

துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை. மனம் பக்குவப்பட்டால் அமைதி அங்கேயே கிட்டும்.

**"சாதல் புதுமை யில்லை"**

பிறந்த நாள் ஒன்று உண்டெனில் இறக்கும் நாளும் ஒன்று உண்டு. இறப்பு புதியதல்ல. அது இயற்கையானது. எல்லோருக்கும் பொதுவானது இந்த உண்மையை உணர்ந்தும் உள் வாங்கியும் வாழ்நதால் எதற்கும் அஞ்சாமல் வாழ்க்கையை வாழும் வரை ரசிக்கலாம்.

**"வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே"**

**"முனிவின் இன்னாது என்றலும் இலமே"**

இந்த வாழ்க்கையில் எது, எவர்க்கு, எப்போது, என்னவாகும் என்று எவர்க்கும் தெரியாது. இந்த வாழ்க்கை மிகவும் நிலை அற்றது. அதனால் இன்பம் வந்தால் மிக்க மகிழ்வதும் வேண்டாம். துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம்.

**வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்.**

"மின்னோரு வானம் தண்துளி தலை, ஆனாது கல்பொருது இரங்கும் வமல்லல் பேர்யாற்று நீர் வழிப்படூஉம் புனையோல்

**ஆருயில் முறை வழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்"**

இந்த வானம் நெருப்பாய், மின்னலையும் தருகிறது நாம் வாழ மழையையும் தருகிறது. இயற்கை வழியில் அது அதன் பணியைச் செய்கிறது. ஆற்று வெள்ளத்தில் கற்களோடு அடித்து முட்டிச் செல்லும் படகு போல வாழ்க்கையும் சங்கடங்களில் அவர் அவர் ஊழ் படி, அதன் வழியில் அடிபட்டு போய்க்கொண்டு இருக்கும் இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்.

ஆதலில் இந்த தெளிவு பெற்றால் பெரிய நிலையில் உள்ள பெரியவர்களைப் பார்த்து மிகவும் வியந்து பாராட்டவும் வேண்டாம். சிறிய நிலையில் உள்ள சிறியவர்களைப் பார்த்து ஏளனம் செய்து இகழ்வதும் வேண்டாம். அவரவர் வாழ்வு அவரவர்க்கு. அவர் அவர்கள் அவற்றில் பெரியவர்கள்.

**"இதைவிட வேறு யார் வாழ்க்கைப் பாடத்தை சொல்லித் தரமுடியும்"**

எழுதியவர் ஊர் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்கா, மகிபாலன்பட்டி கிராமத்தில்.....

அவர் பிறந்த இடத்தில் நம்மை ஒரு பாழடைந்த பலகை மட்டுமே நம்மை வரவேற்கிறது. (கூகிள் தேடல்)


"சுவாமி செயல்முறை அறிவையே, மேடைப் பேச்சுக்களிலும் மேலாக விரும்புகிறார். நீங்கள் பெரிதாக ஒன்றும் செய்யத் தேவையில்லை. ஒரு போதனையையாவது முழுமையாகப் பின்பற்றவும். ஒன்றை யென்றாலும் இதய பூர்வமாகப் பின்பற்றினால், நீங்கள் மீட்கப்படுவீர்கள்".

- சத்தியசாயி அருளமுதம், - Vol 14, ஆ.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மையை எவ்வாறு விருத்தி செய்யலாம்?

## இளவயதிலிருந்தே தூய்மை



- கலியுகத்தில் வாழ்க்கைக் காலம் குறைந்து விட்டது. துவாபரயுகத்தில் கூடிய வயதுவரை வாழ்ந்தார்கள். மகாபாரதப் போர் நிகழ்ந்தபோது, கிருஷ்ணருக்கு 76 வயது. அர்ஜுனனுக்கு 74 வயது. கௌரவப் படைக்குத் தலைமை வகித்த பீஷ்மருக்கு 112 வயது ஆகும். துவாபர யுகத்தில் 70 வயதானவரை இளம் பையனாகக் கருதினார்கள். ஆனால் இன்று 17 வயதுப் பையன் கிழவன் போல் பலவீனமாக இருக்கிறான். இதற்குக் காரணம் என்ன? முன்னைய காலத்தில் மக்களின் இதயம் தூய்மை யாயிருந்தது. அவர்கள் 3 P's ஐப் பின்பற்றினார்கள். அதாவது தூய்மை (Purity), பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றைப் பின் பற்றினார்கள். அவர்கள் சத்தியத் தையும், தர்மத்தையும் போதிப்பதிலும் பார்க்க வாழ்க்கையில் பின்பற்றினார் கள்.

  - சத்தியசாயி அருளமுதம்- மலர் 29: 24.07.1996

- இளம்பராயம் முக்கியமானதும் பவித் திரமானதுமாகும். இது ஒரு பொற் காலப் பராயம். தீமைகளிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். இவர்கள் பார்ப்பது, சொல்வது, கேட்பது, செய்வது எல்லாம் பவித்திரமானதாக இருக்க வேண்டும். முதலாவதாக இதயத்தை கடவுள் மீதுள்ள அன்பினால் நிரப்பவேண்டும்.

  - சத்தியசாயி அருளமுதம்- மலர் 29: 08.07.1996

- இன்றைய மாணவர்கள் ஆன்மீக இதயத்திற்கும் மேலாக உலகியற் கலைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதயம் உள்ளிருப்பது, கலை வெளியிலுள்ளது. கலை உலக மயமானது, இதயம் தெய்வீகமானது. கலை உலகவியலுடன் (பிரவிருத்தி) தொடர்புபட்டது. இதயம் ஆன்மீகத்துடன் (நிவ்விருத்தி) தொடர்புபட்டது. நிவ்விருத்தி தத்துவம் பவித்திரமானதுமாகும். இதை வேதாந்தத்தில் குணமற்றது, சலனமற்றது, நிலையானது, இறுதியானது, தூய்மையானது, சுதந்திரமானது, பவித்திரத் தோற்றம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. (சம்ஸ்கிருதத்தில் நிர்க்குணம், நிரஞ்சனம், சனாதன, நிகேதனம், நித்தியம், சுத்த புத்த முக்த நிர்மல, ஸ்வயரூபினம்).

  சிநேகிதம் கொள்ளும்பொழுது ஒருவரையும் வெறுக்கவேண்டாம். ஒருவருக்கும் தீமை செய்யவேண்டாம். இப்படியான கல்வியையே பெற்று, பரந்த மனப்பாங்குடன், தூய்மையுடன் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்பதையே பகவான் வேண்டுகிறார். இதுவே எனது ஆசிச் செய்தியாகும்.

  - சத்தியசாயி அருளமுதம்- மலர் 32: 22.11.1999

- ஒவ்வொரு மாணவனும் சத் கர்மத்தையே செய்யவேண்டும். இது சித்த சுத்தியடையச் செய்யும். எங்கே தூய்மையுண்டோ அங்கே ஞான சித்தி ஏற்படும். இவையெல்லாம் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன. வெளியில் தேடவேண்டிய அவசியமில்லை.

  - கோடை மழை பிருந்தாவன்: அ16:03.06.1990

- ஆதிசங்கரர், நல்லோரின் சேர்க்கையே ஆன்மீகத்தில் முதலாவது படியாகும் என்றார். ஞானம், புத்தி உள்ளவர்களின் சேர்க்கை, பற்றை அறுப்பதுடன், மௌனத்திலும் தனிமையிலும் ஆர்வத்தை உண்டாக்கும். இதன் மூலம் பிரமையிலிருந்து விடுபடலாம். இதைத்தான் பகவத் கீதையில் அர்ஜுணன் கேட்டதாகச் சொன்னான். இந்நிலையின் பின்பு அந்த பரப் பிரம்மத்துடன் தொடர்பு உண்டாவதை உணர்வான். (தத்துவாம் ஆசி) இந்த உணர்வே முக்தியின் அறிகுறியாகும்.

  - சத்தியசாயி அருளமுதம்- மலர் 3: 28.04.1963



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சித்த சுத்தியின் பின்பு ஏற்படும் தூய் மையான பேருணர்வு கடவுளையும், நோக்கையும் அறியத் தரும். இளம் பராயத்திலேயே தூய்மை யைப் பெற வேண்டும். யார் வேளைக்கே தொடங்கி, அவதானமாக, மெதுவாகப் பயணித்து இறுதி நோக்கை அடைந்த வர்களே வெற்றி அடைந்தவர்களாவர். கடவுளை நோக்கிய பயணத்தில் எமது சிறிய பாதத்தை வைத்தால், அதனால் எழும் ஆனந்தம் எம்மை முன்னேற வழி வகுக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர்10 : 12.05.1970

**புறத்தூய்மையை விருத்தி செய்தல்**

- தனி மனிதனின் உன்னத மாற்றம் மிகவும் முக்கியம். இன்றைய மனிதனோ தீமையான செயல்களில் செலவழிக்கின்றான். காலை தொடக்கம் மாலை வரை, புனிதமற்ற செயல்களிலே செலவிடுகின்றான். தன்னைத்தானே இழிவு படுத்து கின்றான். பிராணிகளைக் கொன்று உண்கின்றான். மனதைத் தூய்மைப் படுத்துவதற்குப் பதிலாக மது முதலியவற்றைப் பருகி மாசு படுத்து கின்றான். தெய்வீகமான நேரத்தை சூதாட்டத்தில் செலவிடுகின்றான். தீய செயல்கள் மூலம் தீயதை வளர்க்கின்றான். மேலும் களவு, மற்றவர்களைத் திட்டுவது போன்ற கீழ் த்தரமான செயல்களில் ஈடுபடு கின்றான். ஆபாசமான நூல்களை வாசித்து எண்ணங்களை மாசுபடுத்தி உணர்வுகளையும் களங்கப் படுத்துகின்றான். இவன் தொடர்ந்து தீய செயல்களில் ஈடுபடுவதால் சமூகத்தையும் சீரழிக்கின்றான். தனி நபர் கெட்டுப் போனால் சமூகமும் கெட்டுப்போகும். தனி நபரையும் சமூகத்தையும் சீர்திருத்த ஆன்மீகப் போதனையும் ஆன்மீகப் பரப்பலும் மிகவும் அவசியம்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 32: 28.04.1999

- இன்று சகலதும் மாசடைந்து விட்டன. சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், (காதைப் பிளக்கும் சத்தத்தினால்) கேட்கும் கருவி, உண்ணும் உணவு எல்லாமே மாசடைந்துள்ளன. இதனால் மனிதனின் ஆரோக்கியம் பாதிப் படைந்துள்ளது. இதைவிட மனமும் மாசடைவதனால் ஆரோக்கியம் மேலும் பாதிப்படைகிறது. சாந்தமான, அமைதியான தூய்மையான வாழ்வு வாழப் பழகவேண்டும். வரும் துன்பங்கள், பின்னடைவுகளெல்லாம் நகரும் முகில்களைப் போல் நகர்ந்துவிடும். இதை நாம் விளங்கிக்கொண்டால், பதட்டத்திற்கு இடம் இருக்காது.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 27: 21.01.1994

- உடம்பு ஆண்டவன் உறையும் ஆலயம். அவர் இதயத்தில் குடிகொண்டுள்ளார். இதை வாயால் மேலோட்டமாகச் சொல்லாமல் இதை ஒரு பெரும் பொறுப்பாக விளங்கிக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கணமும் இது மனதில் இருப்பதை உணரவேண்டும். கோவில் அர்ச்சகர் முதலில் மூலஸ்தானம், பாத்திரங்கள் எல்லாம் கழுவி, மந்திரம் சொல்லி உருவச் சிலைக்கு அபிஷேகம் செய்து பூக்கள் சார்த்தி சாம்பிராணிப் புகைபோட்டு இறை நாமங்கள் பாடுவார்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 11: 18.04.1971

- எல்லோரும் தேகத் தூய்மையை அனுசரிக்க வேண்டும். உடல், உடை, நடத்தை ஆகியவற்றில் தூய்மையைப் பேணவேண்டும். இது புறத்தூய்மை. இது போதாது மனதையும் தூய்மைப்படுத்தவேண்டும். எண்ணங்கள் தூய்மையானதாய் இருக்கவேண்டும். புறத்தூய்மையையும் அகத் தூய்மையையும் பேணவேண்டும். நீரினால் கழுவி புறத்தூய்மையை அடைந்துவிடலாம். அகத்தூய்மையை எவ்வாறு அடையலாம். ஒரேயொரு வழிதான் உள்ளது. சிறிய பூச்சி தொடக்கம் பிரமாண்டமான பெரியதிலும் கடவுள் உள்ளார் என்பதைத் தெரியவேண்டும். இந்த தொடர்ச்சியான பேருணர்வு மனதைத் தூய்மையாக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர்22: 20.06.1989

- விழா நாளில் ஒவ்வொருவரும் காலை யில் எண்ணெய் தேய்த்து முழுகுவார் கள். உடற் சுத்தம் தேக ஆரோக்கியத்திற்கு உகந்தது. மேலும் உள்ளும் புறமும் கடவுள் இருப்பதனால் உள்ளும் புறமும் தூய்மையாக இருக்கவேண்டும். அகத்தைத் தூய்மையாக்க தீய குணங்களை அகற்றி நல்ல குணங்களால் நிரப்பவேண்டும். விழா நாட்களில் புதிய ஆடை அணிவதன் உட்கருத்து, அழுக்குத் துணியை அகற்றுவது போல, மனதிலுள்ள அழுக்கையும் அகற்றுவதையே குறிக்கின்றது. இதயத்தை வஸ்த்ரா என்றும் அழைப்பர். இப்பதம் உடையையும் குறிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அகத் தூய்மைக்கு இதயத் தூய்மையை ஏற்படுத்தவேண்டும். புத்தாடை அணிவது இதயம் தூய்மை யடைவதையே குறிக்கின்றது. விழாக்களில் வெளிநடத்தைகளுடன் உள்ளார்த்தமும் உண்டு.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 25: 31.08.1992

- உனது புலன்களையும் கர்மேந்திரிய ங்களையும் புத்தியையும் தூய்மைப் படுத்தவும், தீய பழக்கங்கள், தீய வாசனைகள், தீய உணர்வுகள், தீய எண்ணங்கள் ஆகியவற்றை அகற்றவேண்டும். உன்னைத் தூய்மையானவனாகவும், தளம்பாதவனாகவும், தன்னலமில்லாதவனாகவும் ஆக்கிக்கொள். இதன் பின்பே உள்ளுறையும் தெய்வத்தை வணங்குவதற்கு தகுதியாவாய். அதுவரை இறைவனின் ஆலயம் சீரழிந்து வௌவால்கள் என்னும் அஞ்ஞானம் வாழத் தொடங்கிவிடும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 11: 18.04.1971

- ஒரு வன்முறையாலும் தீண்டப்படாத உடலிருக்கவேண்டும். மனிதன் கைகளினால் வன் முறைகளையும் பாபச் செயல்களையும் செய்கின்றான். தர்மத்தை நிலை நாட்டவே எமக்கு உடல் தரப்பட்டது. இப்புனிதமான பரிசு மூலம் ஏனையோருக்கு உதவி செய்யவும். இறை செயல்களுக்கும் உபயோகிக்க வேண்டும். இதனால்தான் உடலைத் தூய்மையாக்க முடியும். உடல் மனம் வாக்கு தூய்மையடைந்ததும் அகத் தூய்மை ஏற்பட்டுவிடும். சூச்சி (தூய்மை Suchi) அகத் தூய்மையும் புறத்துப்புரவையும் குறிக்கின்றது.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 26: 30.08.1993

- தனது இளமை, வலிமை, அழகு இவற்றால் தற்பெருமை கொள்ளக் கூடாது. முதுமை தனது நிலையைக் காட்ட விரைவாக வந்துவிடும். முதுமையைத் தவிர்க்கமுடியாது. கூனல் முதுகுடன் முகத்தில் சுருக்கு களுடன், பார்வை குன்றுவது, இளைஞர்களின் பகிடிக்கு ஆளாவது இவையெல்லாம் முதுமையின் அறிகுறிகள். சகலதுமே தேய்ந்து இல்லாமற் போவதே உலக நியதி. உமது தூய்மையே நிலைத்து நிற்கும். களங்கமான வாழ்வு வாழ்ந்தால் மனிதன் தன்னைக் கீழ்த் தரத்திற்குக் கொண்டு செல்வான்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 21: 12.07.1988

### அந்தக்கரனாவை தூய்மைப்படுத்தும் தேவை

- உடம்பை மாத்திரம் தூய்மையாய் வைத்திருப்பது போதாது. அகத் தூய்மையும் முக்கியம். அகத் தூய்மை புறத்தூய்மையிலும் மேலாக முக்கியம். எதை முழுமையாக அனுபவிக்க வேண்டுமோ மனதின் தூய்மை முக்கியம். உலகில் பல பவித்திரமான செயல்களைச் செய்தாலும், உளத் தூய்மையும் இதயத் தூய்மையும் இல்லாவிட்டால் வீணாகிப் போய்விடும். ஈயம் பூசப்படாத செப்பு பாத்திரத்தில் நல்ல பதார்த்தங்களைப் போட்டு



சமைத்தாலும் உணவு பழுதாகிவிடும். இதயமும் அன்பினால் தூய்மையாகிவிட்டால் எல்லா செயற்பாடுகளும் பவித்திரமாகிவிடும். தூய்மையில்லாத இதயத்துடன் செய்யும் செயல்களெல்லாம் விரும்பத்தகாத பலன்களையே அளிக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 26: 01.01.1993

- கிணற்றில் ஒரு கல்லை எறிந்தால் நீரில் எழும் அலைகள் கிணறு முழுக்கப் பரவும். இதேபோல ஒரு தீய எண்ணத்தை மனதில் போட்டால் அதன் விளைவு உடல் முழுக்கப் பரவும். தீய எண்ணம் விழுந்தால் கண்கள், காதுகள், நாக்கு எல்லாம் தீயவற்றையே வெளிப்படுத்தும். கைகள் தீயனவற்றையே செய்யும். கால்கள் தீய இடங்களுக்கே எடுத்துச் செல்லும். ஆகவே இதயத்தைத் தூய்மையாக வைத்திருப்பது மிகவும் முக்கியம்.

- சத்திய சாயி அருளமுதம்- மலர் 29: 08.07.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஐம்புலன்களையும் புனிதப்படுத்துவதே சத்தியத்தை அடையும் பாதை. புலன்கள் களங்கப்பட்டால் ஆன்மீக சாதனைகளால் என்ன பயன்? தாங்கியில் இருக்கும் நீர் மாசடைந்தால், பைப்புக்களில் வரும் நீரும் மாசடைந்தேயிருக்கும். இதயமே தாங்கி, பார்வையும் எண்ணமும் தூய்மையற்றவை. சொல்லோ வன்மையானது. இப்படியாகில் தூய்மையடைவது எப்படி? புலன்களும் களங்கமடைந்துவிடும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 31: 05.02.1998

• மேன்மையான நோக்கை விருத்தி செய்து ஏனையவர்களையும் ஊக்கமாக்கி முன்னேறுவதற்கு சித்த சுத்தி இருக்கவேண்டும். ஆன்மீக ஞானம் தூய இதயத்திலிருந்துதான் வெளிப்படும். பூண்டுகளைப் பிடுங்கி, நிலத்தை உழுது விதைகளை விதைத்து, நீர் பாய்ச்சினால்தான் அறுவடையைப் பெறமுடியும். இதயம் என்ற வயலை துப்புரவு செய்து, தீய எண்ணங்களையும் தீய உணர்வு களையும் அகற்றி அன்பெனும் நீரைப் பாய்ச்சி ஆன்மீக சாதனைகளால் உழுது, தெய்வ நாமம் என்ற விதைகளை விதைத்தால்தான் ஞான நிலையை அடையலாம். சாதனைகள் அனைத்திலும் முழுமையான தூய்மை இருக்கவேண்டும். இத் தூய்மையை அடைவதற்கு சிரேயா (Shreya) நல்ல பாதை, பிரேயா (Preya) மகிழ்ச்சி பாதை என்ற இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 26: 07.10.1993

• சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு புலன்களுடனும் புலன் உணர்வுகளுடனும் அந்தகரணத்தை (அகக் கருவிகள்) பிராண சக்தி மூலம் அடைகின்றன. ஆகவே ஒவ்வொரு மனிதனிலுமுள்ள தெய்வீகம், ஐம்புலன்களான சப்தம், தொடுகை, பார்வை, ருசி, மணம் என்பவற்றுடன் தொடர்புடையது. இந்த உண்மையைப் புரிவதற்கு மனிதன் முதலில் எண்ணம், சொல், செயலில் ஒருமையும், தூய்மையும் அடையவேண்டும். இதுதான் உண்மையான ஆன்மீக சாதனை.

- சத்திய சாயி அருளமுதம்- மலர் 32: 28.04.1999

## அந்தக் கரணம் என்றால் என்ன?

• அந்தக் கரணம் சாதாரணமான பேச்சிலும், ஆன்மீகப் பேச்சுப் பாங்கிலும் உபயோகிக்கப்படுகின்றது. அதன் ரூபம் என்ன? இயல்பு, தனித்துவம், நோக்கு என்ன? இப்படி விசாரணை செய்யும் பொழுது, மனமே அந்தக்கரண என்ற நிலையில் தொழிற்படுவதை அறியலாம். மனம் நாலு விதத்தில்; மனம் (manas), புத்தி (Budhi), சித்த (chitta), அகங்காரம் என்ற நிலைகளில் இயங்குகின்றது. மேலும் சொல்லப்போனால் மனம், புத்திக் கூர்மை, ஞாபகம், தற்பெருமை என்ற கருத்துக்கள் வெளிப்படும். புத்தி, சித்தம், அகங்காரம் என்ற மூன்றும் மனதின் சூக்கும நிலைகளேயாகும்.

மனம் செய்யும் தொழிலின் அடிப்படையில் அதற்குரிய பெயரை எடுத்துக் கொள்கின்றது. ஒரு பிராமணன், பூஜை செய்யும் பொழுது பூசாரி என்றும், மடப்பள்ளியில் சமையற்காரன் என்றும் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது ஆசிரியர் என்றும் பஞ்சாங்கம் வாசிக்கும்பொழுது பஞ்சாங்க பிராமணன் என்ற நாமங்களால் அழைக்கப்படுவார். இதேபோல மனம் எண்ணத்தில் நிலைக்கும் பொழுது மானஸ் என்றும், நல்லது தீயது, சரி பிழை என்ற பகுப்பாய்வில் நிலைக்கும் பொழுது புத்தி என்றும், மூன்றாவதாக சங்கல்பம்: தீர்மானம் எடுக்கும் போதும் ஞாபகப் பதிவாகவும் இயங்கும்போது சித்த என்று சொல்லப்படுகிறது. மனம் உடம்புடன் ஒன்றும் பொழுது அகங்காரம் என்ற பெயரை எடுக்கிறது. (அதாவது நான்தான், நான்தான் செய்கிறேன் என்ற நினைவு).

- கோடை அருளமுதம்- 24.05.1990

• அந்தக்கரண என்பது, மனஸ், புத்தி, சித்த, அங்காரம் எல்லாவற்றையும் சேர்த்துக் குறிக்கின்றது.

***National Symposiuman Value Orientation 24.09.1987***

•இயங்கும் முறையைப் பொறுத்து அந்தக்கரணவிற்கு நாலு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்ண நிலையில் மனஸ், அலையும் பொழுது சித்த என்றும், விளக்கம், விசாரணை செய்யும் பொழுது புத்தி என்றும் எனது என்ற மனப்பாங்கு எழுந்தவுடன் அகங்காரம் என்றும் கூறப்படுகின்றது. ஒரு பொருளுக்கு நாலு பெயர்கள் கொடுக்கப்பட்டன? மனம் எப்போதும்

95 YEARS OF SELFLESS LOVE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசங்களையே காணும். புத்தி எப்போதும் ஒருமையையே காணும். எமது முயற்சிகளெல்லாம், பன்மையில் ஒருமையைக் காண்பதையே நோக்காகக் கொண்டுள்ளதாயிருக்க வேண்டும். ஒன்றைப் பலதாகப் பிரிக்க முயற்சிக்கக் கூடாது.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 17: 17.03.1983

• எமது புலனுறுப்புகள் புறத்தில் தெரிபவை, உதாரணமாக கண்கள், செவிகள், மனம், புத்தி சங்கல்பம் உள்ளே செயற்படுகின்றன. ஆகவே இம்மூன்றையும் அந்தக்கரண என்று கூறுகின்றோம். புறப் புலன்களால் பெறப்படும் துலங்கல்களை அந்தக் கரணம் உதாசீனம் செய்வது தியாகம் எனப்படும். ஆகவே முதலில் அந்தக்கரணத்தைத் தூய்மையாக்க வேண்டும். இதற்காக நாம் பொருத்த மான முயற்சி எடுக்க வேண்டும். சித்தத்தை தர்மச் செயல் களாலேயே தூய்மையாக்கலாம். பலனை எதிர் பார்க்காமல் நல்ல செயல்களைச் (சத் கர்ம) செய்வதன் மூலம் மனதைத் தூய்மை யாக்கலாம். இதைத்தான் கர்ம யோகம் என்று சொல்கிறோம். அதாவது நிஷ்காம கர்மம். இங்கே தியாகத்துடன் ஆனந்தமும் கலந்துள்ளது.

***Summer Cource: 24.05.1991***

<u>தூண்டுதல்கள் தூய்மையாயிருத்தால் அந்தகரண தூய்மையாயிருக்கும்</u>

• உடம்பு மரணமெய்தாலும் எண்ணங்கள் மரணமடைவதில்லை. எண்ணங்களின் கதிர் தெறிவு உலகைச் சுற்றும். வெப்பம், ஒளி, மின் கதிர்கள் தெறிவடைவதுபோல் மன அலைகளும் தெறிவுக் கதிர்களை உண்டு பண்ணும். எண்ண அதிர்வுகளே மனிதனின் இன்பம், துன்பம், ஆரோக்கியம், வியாதி, கஷ்டம், சுகம், இறப்பு, பிறப்பு ஆகியவற்றிற்குக் காரணம். எண்ணங்களின் சக்தியை உணர்ந்து வாழ்ந்தால் மனித வாழ்வு அர்த்தமுள்ளதாயிருக்கும். உலகம் முழுக்க எண்ண அலைகள் பதிந்துள்ளன. உலகமே எண்ண அலைகளின் வெளிப்பாடேயாகும். ஆகவே எமது எண்ணங்களை மகிமை யான பாதையில் செலுத்தவேண்டும். மனிதன் மேன்மையான எண்ணம், இலட்சியங்கள், உணர்வுகளை விருத்தி செய்தால், மனம் தூய்மையுடன் ஒளியாக மிளிரும். மனம் தூய்மை யானால் செயலும் தூய்மையாயிருக்கும் தூய்மையான செயல்களே தூய்மையான பலன் களைத் தரும்.

- கோடை மழை- பிருந்தாவன்: அ 5: 1993

• உணர்ச்சி வசப்பட்டு செயலில் இறங்கக் கூடாது. அச்செயல் பொருத்தமானதா இல்லையா என்று சிந்திக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு உடனே செயலில் இறங்கக்கூடாது. அப்போதுதான் எமது செயல் ரஜசித், தமசிக்காக இல்லாமல் சத்வீகமானதாக இருக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 20: 03.05. 1987

• சுச்சி (Suchi) என்றால் தூய்மையைக் குறிக்கிறது. இது புறத்தூய்மையை மட்டும் குறிப்பதில்லை. சாதகர்களுக்கு அகத் தூய்மையும் வேண்டும். அகத் தூய்மை என்றால் என்ன? நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் உள்ளுணர்விலிருந்து எழுவனவேயாகும். வெளி உணர்விலிருந்து அல்ல. செயல்கள் எல்லாம். உள் நிலையின் பிரதிபலிப்புகளேயாகும். அகத் தூய்மையிருந்தால் செயல்களும் தூய்மையாயிருக்கும் மனிதன் உள்ளே களங்கமாயிருந்தால் செயல்களும் தூய்மையற்றதாகவே இருக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 26: 30.08.1993

• உள்ளுணர்வுகள் சூக்கும நிலையானாலும் அதிக சக்தி கொண்டவை. உதாரணமாக, ஒரு சிறிய விதையில் எவ்வளவு பெரிய மரம் கிளைகள், இலை, பூ, பழம் எல்லாம் உள்ளே அடங்கியிருப்பது போன்று, உணர்வுகளிலும் சக்தி அடங்கியுள்ளது. உணர்வுகளே துக்கத்திற்குக் காரணம். களங்கமான உணர்வுகள் இல்லாவிட்டால் மனம் அமைதியாகவும் தூய்மையாகவும் இருக்கும். உணர்வுகளே மனத்தை மாசடையச் செய்துவிடும். சத்தியத்தை நோக்கிய பயணத்தில் உணர்வுகளே தடையாயுள்ளன. உணர்வுகள் இல்லையென்றால் மனதும் செயலிழந்து விடும்.

- தியான வாஹினி- அ. 11: பக். 40

• இயற்கை (பிரகிருதி) வாசனாக்கள் நிறைந்த ஒன்று. புறப்பொருட்கள் இந்த வாசனைகளினால் மனதைக் கவர்கின்றன. மனம் பொருட்களையே நினைத்துப் பற்று வைக்கின்றது. வாசனாக்கள் இல்லாவிடில் மனம் வெளிப்பொருட்களை நோக்கி ஓடாது. ஒரு துணி போடப்பட்ட சாயத்தையே எடுத்துக்கொள்ளும். இதேபோல மனமும், சாத்வீகத் தூண்டல் உணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகளால் வெள்ளையாகவும், ரஜசிக் தூண்டல்களால் சிவப்பாகவும் (அமைதியில்லாத), அஞ்ஞானம் கொண்ட தமசத் தூண்டல்களால் கறுப்பு நிறமாகவும் மாறிவிடும். மனம், என்ன வாசனைகளால் நிரப்பப் பட்டுள்ளதோ அதன்படி இயங்கும். ஒருவர் தியானம், மனக்குவிப்பு ஆகிய வற்றால் இந்த வாசனைத் தூண்டல் களை அழிக்க முடியும். மனதென்றால் தூண்டல்களின் கூட்டேயாகும்.

- தியான வாஹினி- அ. 11: பக். 40

## தேசிய சேவைத் திட்டம்



**சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்**

**கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பானத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 180 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.**
**இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org

• மனிதன் தாமசிக் (மந்தம்) ரஜசிக் (தூண்டும்) தூண்டல் வாசனை களால் மனதை நிரப்பி இதயத்தை ஒரு உப்புச் சமுத்திரமாக மாற்றிவிட்டான். உப்புச் சமுத்திரத்திலே திமிங்கிலங்களும் சுறாக்களும் வாழத் தொடங்கிவிடும். இதேபோல தீய மனம் கொண்ட வர்களின் இதயத்தில் உள் எதிரி களான காமம், கோபம், பேராசை, பொறாமை என்பன மேலோங்கிவிடும். இவற்றிற்கு இடம் கொடுக்கக்கூடாது. இவற்றை அறவே அகற்றி விட வேண்டும். அப்போதுதான் கடவுள் தூய் மையான தூண்டல்களால் நிரப்பப்பட்ட இதயத்தில் உறைவார். ஒவ்வொரு வரும் தீய உணர்வுகளா? தூய உணர்வு களா? இதயத்தை நிரப்பு கின்றன என்பதை தொடர்ச்சியாகவும் உன்னிப்பாகவும் பரிசோதனை செய்ய வேண்டும். நாளாந்த பிரார்த்தனையின் போது தெய்வத்தைப் பொருத்தமான மந்திரங்களை உச்சரித்து ஆசீர வாதத்தைப் பெறவேண்டும். அரக்க குணங்களைவிட்டுப் போகுமாறு கட்டளையிடவேண்டும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 20: 03.05.1987

• தூண்டல்களுக்கும் வாசனைகளுக்கும் அடிமைப்பட்டவன் ஞானம் இல்லாத பலவீனமானவனாவான். இதற்காக அஞ்சத் தேவையில்லை. இந்தத் தீய தூண்டல்களை அகற்றிவிட்டால், மறுபடியும் உதாசீனத்தால் மறைந்து போன தூய நிலையை அடையலாம்.

- தியான வாஹினி- அ. 11: பக் 40

• அகங்காரத்தினால் திவ்ய ஞான ஜோதி தரிசனம் கிடைப்பதில்லை. சத்திய பாதையிலிருந்து விலகினால் அகங்காரம் உள்ளிட்டுவிடும். உன்னை அறியாத போதும், உலக எண்ணங்களையும் உணர்வுகளையும் பற்றினால் அகங்காரம் மேலோங்கிவிடும். அகங்காரத்தை அகற்றாமல் ஞானத்தை அடையமுடியாது. ஆத்மாவின் ஒளிப் பிரகாசத்தை அனுபவிக்க வேண்டுமானால் மனதிலுள்ள கரிய அகங்காரத்தை நீக்கவேண்டும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 35: 23.11.2002

• துவைத நிலையிலிருந்து அத்வைத நிலைக்குப் போவதற்கு தீவிரமான ஆன்மீக முயற்சி எடுப்பதுடன் அகங்காரம் முற்றாக அழியவேண்டுமென்று ஆதி சங்கரர் தெரிந்து கொண்டார். இதற்கு ஆயத்தமாவதற்கு யோகம் (கடவுளுடன் இணைதல்) பக்தி, கர்ம மார்க்கத்தைப் போதித்துள்ளார். இச் சாதனைகள், புத்தியைப் பிரகாசிக்கச் செய்து. உணர்வுகளைத் தூய்மையாக்கி, இதயத்தையும் தூய்மையாக்கும்.

- சத்தியசாயி அருளமுதம்- மலர் 3: 28.04.1963

ஜெய்சாயிராம்

YEARS OF SELFLESS LOVE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

- பர்த்தி யாத்திரை

பர்த்தி யாத்திரை 2020 மே மாதம் 3 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இக்காலப் பகுதியிலேயே ஈஸ்வரம்மா தினம் 6 ஆம் திகதியும், புத்த பூர்ணிமா மே மாதம் 7 ஆம் திகதியும் பிரசாந்தி நிலையத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவிருக்கிறது.

- அகில உலக மாநாடு

2020 நவம்பர் 16, 17, 18 திகதிகளில் பிரசாந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

- 4A வலய நாடுகள் பங்கு பற்றும் கூட்டம்

2020 ஜுன் மாதம் 19, 20, 21 திகதிகளில் கொழும்பில் நடைபெற வுள்ளது.

*பிராந்திய செய்திகள்*

- நேருபுரத்தில் வீடு கட்டி வழங்கப் பட்டது.
- 15.9.2019 இல் நெடுங்கேணியில் உள்ள சுந்தரமோட்டையில் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.
- மொரட்டுவயில் மருத்துவ முகாமும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் 29.12.2019 அன்று வழங்கப்பட்டது.
- 13.09.2019 அன்று ஒட்டுசுட்டானில் நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டது.
- சுத்தவியார் சமலங்குளம் என்ற கிராமத்தில் 15.06.2019 அன்று நீர் சுத்திகரிப்பு கருவி பொருத்தப் பட்டது.
- ஸ்ரீ வள்ளிபுரத்தில் 16.6.2019 அன்று ஆழ் துளைக்கிணறு அமைத்து வழங்கப்பட்டது.
- வன்னி , யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டையில் உள்ள வறியவர்கள் சிலருக்கு கண் சத்திரசிகிச்சை செய்ய வசதிகள் அளிக்கப்பட்டன.
- கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் மாவை கலட்டியில் 7.6.2019 அன்று யாழ் நிலையத்தால் நடாத்தப்பட்டது.
- கிராம முன்னேற்ற சேவைகள் செல்வபுரம், திருமால்புரம், இன்பச்சோலை, மாவை கலட்டி, ஆகிய கிராமங்களில் வடபிராந்தியத்தாலும், பாரதிபுரம், மாரியம்மன் வீதி மாணவர்களுக்கான சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி யாழ் நிலையத்தாலும் நடாத்தப்படுகிறது.
- 36 மணித்தியால லகு ருத்ர சாதனை யாழ் நிலையத்தில் இடம் பெற்றது.
- ஒற்றுமையே தெய்வீகம் என்ற தலைப்பில் கல்வி வட்டங்கள் நடாத்தப்படுகின்றன.
- ஜுலை மாதம், டிசம்பர் மாதம் கலாநிதி ஸ்ரீநிவாசன் ராகவன் அவர்கள் வருகை தந்து செயற்பட்டார்.
- கிழக்கு மாகாணத்தில் சாயி ஆன்மீகக் கல்வி மாணவர்களின் ஒன்று கூடலும் 24 மணிநேர ஒதுங்கலும் அக்கரைப்பற்றில் ஜனவரி மாதம் 4, 5 திகதிகளில் இடம் பெற்றது. இதில் 212 மாணவர்களும் 58 குருமாரும், 75 பெற்றோரும் கலந்து கொண்டனர்.

'25-30 வருடங்களில் உலகிலுள்ள சகல மனித வர்க்கமும் ஒன்றாகி விடுவார்கள். பாரத தேசத்தி லிருந்தே இந்த ஒற்றுமை உணர்வு பரவும்''

31.05.2008 அருளுரை

'அறிவைக் கற்பிப்பவர்கள் மீதும் , முரண்பாடுகளை மறந்து ஒன்றாகச் செயற்படுபவர்கள் மீதும் எனக்கு விருப்பம். இதற்கு மேலாக நான் எதை விளங்க வைக்கலாம்'

- சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை, மயிலிட்டி பகுதியில் மரநடுகை சேவை - வடபிராந்தியம்.



கனதலியார், சாமாங்குளம் ஒட்டுசுட்டான் பகுதியில் வடிகட்டிய குடிநீர் வழங்கும் சேவை



அம்பாறையில் குழாய் கிணறுகள், அமைத்து வழங்கல்





நேருபுரம் கிராமத்தில் வீடமைப்பு சேவை
- கிழக்கு மாகாணம்

COVID -19 சேவை - வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை சாயி நிலையம் - வடமத்திய பிராந்தியம்



முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org